
Book 17

# புதிய நினைவூட்டல்

மாத இதழ்



அவர்கள் எத்தகையோரென்றால்
அனைத்து சொற்களையும்
பரிசீலிப்பார்கள், பின்பு சிறந்ததை
எடுத்து பின்பற்றுவார்கள்.
கடவுள் நேர்வழி செலுத்துவது
இத்தகையவர்களைத்தான்.
அறிவைப் பெற்றவர்கள்.
(அல்குர்ஆன் 39:18)


ஜனவரி
2001
January

PUTHIYA NINAIVOOTAL
TAMIL MONTHLY

# எளிய உண்மைகள்

**இறுதி இறைவேதமான அல்குர்ஆன் உலகின் வேறு எந்தப் புத்தகத்திலும் காணப்படாத, தனித்தன்மையான, அற்புதமான அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. அதில் உள்ள ஒவ்வொரு விஷயமும் 19 என்ற எண்ணின் அடிப்படையில் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இது, இறைவன் குர்ஆனில் 74:23-31வசனங்களில் கூறுவது போல இக்கட்டமைப்பு குர்ஆன் மனிதர்களின் சொல் அல்ல என்று நிரூபிப்பதாகவும், நம்பிக்கையாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதாகவும், நயவஞ்சகர்களை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளதை அறிவுடையோர்கள் கண்கூடாகக் கண்டு கொள்ளலாம்.. 74:35ல் இறைவன் கூறுவதைப் போல் இது ஒரு மிகப்பெரியஅற்புதமாகவும் அமைந்திருப்பதை அறிந்து அதிசயிக்கலாம், மேலும் இக்கட்டமைப்பு அல்குர்ஆனின் ஒவ்வொரு எண்ணையும் எழுத்தையும் பாதுகாக்கும் வேலையை தொடர்ந்து செய்யக் கூடியதாகவும் உள்ளதை அறிந்து வியக்கலாம் .**

1. குர் ஆனின் முதல் வசனமான பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் என்பதில் இடம் பெறும் அரபி எழுத்துக்கள் ........ 19
2. குர்ஆன் 114 சூராக்களை கொண்டது 114 = ........ 19x6
3. குர் ஆனின் மொத்த வசனங்களின் எண்ணிக்கை 6346 ........ 19x334
   (அதில் எண்ணிடப்பட்டது 6234, எண்ணிடப்படாதது 112 (பிஸ் மிக்கள்)
   6234 + 112 = 6346 கவனிக்க 6+3+4+ 6 = ........ 19
4. 'பிஸ்மில்லாஹ்' குர் ஆனில் 114 முறை உள்ளது 114 ........ 19X6
   ( சூரா 9ல் பிஸ்மி இல்லாவிட்டாலும் 19 சூராக்கள் தள்ளி 27வது
   சூராவில் இரு முறை உள்ள) சூரா 27 வசனம் 30 ஆக 27+30 = 57........ 19x3
5. பிஸ்மில்லாஹ் இல்லாத சூரா 9ற்கும் பிஸ்மில்லாஹ் இருமுறை இடம் பெறும் சூரா 27க்கும் இடையில் இடம் பெறும் சூராக்கள்........ 19
6. பிஸ்மி இல்லாத சூரா 9 முதல் பிஸ்மி இருமுறை இடம் பெறும் சூராவான 27 வரை கூட்டினால் (9+10+11.... 27) வரும் கூட்டுத்தொகை 342 = .....19x18
7. இதில் முக்கிய விஷயம் என்ன வென்றால் இருமுறை பிஸ்மி இடம் பெறும் சூராவில் முதல் பிஸ்மிக்கும் இரண்டாம் பிஸ்மிக்கும் இடையில் உள்ள வார்த்தைகள் சரியாக அதே 342 = ........19x18
8. புகழ்பெற்ற முதல் வஹீ (96:1 முதல் 5) யில் இடம் பெறும் வார்த்தைகள் சரியாக ........ 19
9. 19 வார்த்தைகள் கொண்ட அந்த முதல் வஹீயில் இடம் பெறும் எழுத்துக்கள் சரியாக 76 ........ 19x4
10. இறக்கப்பட்ட வரிசையில் முதல் சூராவான 96ல் இடம் பெறும் வசனங்கள் ...........19
11. இந்த சூரா, இடது புறத்திலிருந்து புரட்டினால் வருவது ........19வது இடத்தில்
12. 96ம் சூரா முழுதும் இடம்பெறும் எழுத்துக்கள் 304 ........ 19x16
13. இறுதி வஹீயான சூரா 110ல் இடம் பெறும் வார்த்தைகளும் சரியாக ........ 19
14. கடைசி வெளிப்பாட்டின் (சூரா 110:1) முதல் வசனத்தில் இருப்பது ............ 19 எழுத்துக்கள்
15. 29 சூராக்களின் ஆரம்பங்களில் வரும் 14 எழுத்துக்கள் கொண்டு அமைக்கப்பட்ட 14 வகையான முத்திரை எழுத்துக்கள் (உம்) அலிப், லாம், மீம்) இவற்றைக் கூட்ட 29+14+14 = 57 = ........ 19x3
16. முத்திரை எழுத்துக்கள் அமைந்த 29 சூராக்களின் சூரா எண்களைக் கூட்ட (2+3+7+ ...... + 50+ 68) = 822 அத்துடன் 14 ஐக் கூட்ட (அதாவது 14 வகைகள்)
    = 822+14 = 836 = ........19x44
17. முத்திரை எழுத்து கொண்ட முதல் சூராவான 2க்கும் முத்திரை எழுத்து கொண்ட கடைசி சூராவான 68க்கும் இடையில் முத்திரை எழுத்து இல்லாத சூராக்கள் 38 உள்ளன ........ 19x2
18. முதல் முத்திரை சூராவிலிருந்து கடைசி முத்திரை சூரா வரை முத்திரையிட்டதும் முத்திரையிடாதது மாக மாறி மாறி வருவது ........ 19 விதமாக
19. குர்ஆனில் 30 எண்கள் குறிப்பிடப்படுகின்றன. அவை 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 19, 20, 30, 40, 50, 60, 70, 80, 99, 100, 200, 300, 1000, 2,000, 3,000, 5,000, 50,000 & 1,00,000 இந்த எண்க ளின் கூட்டுத் தொகை 1,62,146 ........ 19x8534

மிக்க அருளும் மிக்க அன்பும் உடைய இறைவனின் பெயரால்.

இந்த மக்கள் பேசும் பேச்சுக்களை நாம் நன்கறிகின்றோம்.இவர்களை நிர்பந்தப்படுத்தி ஏற்கச் செய்வது உமது பணியல்ல என் எச்சரிக்கைக்கு அஞ்சுகின்ற ஒவ்வொருவருக்கும் நீர் இந்த குர்ஆனைக் கொண்டு அறிவுரை கூறுவீராக! (50:45)

# புதிய நினைவூட்டல்

## ஓர் உலகம், ஓர் இறை, ஒரே செய்தி


செய்தி 1

ஜனவரி 2001
நினைவு 12


குறிப்பு:- உண்மையான இறையச்ச முடையவர்களே மேம்போக்காக எதையும் படிக்காமல் வசன எண்களை உங்களிடமுள்ள குர்ஆனை ஒப்பிட்டு பார்த்து சிந்தித்து விளங்கிக் கொள்ளுங்கள்.


ஆசிரியர் :
C.S. ரஃபியுத்தீன்

துணை ஆசிரியர் :
N.A. அஹமது ஹுஸைன்



தனிச்சுற்று இதழ்

சந்தா விபரம்

உள் நாடு ஓராண்டு ரூ. 60.00

தனி பிரதி ரூ. 5.00

புதிய நினைவூட்டல் மாத இதழ்

அலுவலகம்


## இதழின் உள்ளே


★ இறைவன் கூறும் ஷஹாதத்

★ இறை அத்தாட்சிகள் அன்றும் - இன்றும்

★ அரபியில் பெயர் மாற்றம். அவசியமா?

★ நயவஞ்சக அரபிகள்

★ (தவ்ஹீது ஆலிமுடன்) நேருக்கு நேர்

★ (91 : 15 வசனத்திற்கு ) அர்த்தம் அனர்த்தம்

★ கேள்வி பதில்

# இறைவன் கூறிய
# ஷஹாதத் எது?

கடவுளை தவிர வேறு தெய்வம் இல்லை என்று அவரே சாட்சி அளிக்கிறார்; அத்துடன் வானவர்களும், அறிவு உடையவர்களும் அவ்வாறே சாட்சி அளிக்கிறார்கள். உண்மையாக, நியாயமாக அவர்தான் சாவ அதிகாரமுள்ள தெய்வம்; அவரை தவிர வேறு தெயவம் இல்லை; அவர் சர்வ சக்தியுடைவர்; மிக்க ஞானமுள்ளவர் (3 : 18)

இன்று, முஹம்மதியர்கள் தாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கும் மார்க்கத்தின் அடிப்படை என்று கருதுவது, அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ். வஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (அதற்கு அவர்கள் கூறும் அர்த்தம்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. மேலும் முஹம்மத் இறைவனின் தூதர் ஆவார் என்று நான் சாட்சியம் கூறுகின்றேன் என்ற ஷஹாதத் (சாட்சியம்) ஆகும்.

இவ்வாறு சாட்சியம் கூறும் மனிதர்கள் நயவஞ்சகர்கள் (63:1) என்றும், அவ்வாறு , கூறுவது இணைவைப்பு என்றும் (42:21), குர்ஆன் தெளிவாக உரைப்பதை நாம் எடுத்துக் கூறினால் பாரம்பர்ய முஹம்மதியர்கள் அதனைப் , புரிந்து கொள்ள மறுக்கின்றனர்.

முஹம்மதியர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். குர்ஆன் இறைவனின் இறுதித் திருவேதம். முழுமையானது, விவரிக்கப்பட்டது என்று நம்புவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இறைவன் குர்ஆனில், கூறும்', என்று 332 விஷயங்களை தூதருக்கும் நம்பிக்கையாளர் களுக்கும் கட்டளையிடுகின்றார். அவ்வாறி ருக்கையில் ஒரு முறையேனும் இத்தகைய ஷஹாதத்தைக் கூறும்படி கட்டளையிடவில்லை. மேலும் இதுதான் மார்க்கத்தின் அடிப்படை என்ற கருத்தை மறைமுகமாகவேனும் கூறக்கூடிய வசனங்கள் கூட இல்லை.

இன்றைய முஹம்மதியர்கள். பொதுவாக, குர்ஆன் வெறும் அடிப்படைகளை மட்டும்தான் கூறுகின்றது. மேல் விவரங்கள் நபி கூறிய (தாகக் கூறப்படும்) ஹதீஸ்களில் உள்ளது என்ற கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். அப்படியென்றால் ஹதீஸ்கள் எதனை இஸ்லாம் மார்க்கத்தின் அடிப்படையாகக் கூறுகின்றதோ அது ஒரு முறையேனும் தர் ஆனில் கூறப்பட்டிருக்கிறதா? விவரிக் கப்பட்ட வேதம்' என்று இறைவன் கூறுகின்றாரே , அடிப்படையைக் கூட விவரிக்கவில்லை என்று இவர்கள் இறைவன் மீது பழி கூறுகின்றனரா?

உண்மையில் பாமர முஸ்லிம்களை சிந்திக்க விடாமல் தடுப்பது இன்றைய இஸ்லாமிய அறிஞர்கள் தான். அவர்கள் பொய்களையும் புரட்டுக்களையும் கூறி பாமர முஸ்லிம்களைப் பயமுறுத்துகின்றனர். குர்ஆனின் வசனங்களைத் திரித்துக் கூறி. அதன் அடிப்படையான கலப்படமில்லாத ஓரிறைக் கொள்கையை விட்டும் பாமர முஸ்லிம்களை விலக்கி விடுகின்றனர். யாரை இவர்கள் மார்க்கத்தின் காவலர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரோ அவர்களே இவர்களை வழிகேட்டில் தள்ளி - விடுகின்றனர்.

வேலியே பயிரை மேய்ந்த கதைதான். ஆனால் பாமர முஸ்லிம்கள் இறைகட்டளைப்படி சிந்திப்பார்களா அல்லது சிந்திக்காத விலங்குகள் போல இருந்து விடப் போகின்றார்களா?

அவர்கள் குர்ஆனை ஒருமுறை திறந்த மனத்துடன் படித்து பார்த்தால், அடிபணிதல் என்ற இந்த மார்க்கத்தின் அதிபதி எல்லாம் வல்ல இறைவன மட்டுமே. எனவும், குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் ஆகும் எனவும் இறைவன் வலியுறுத்திக் கூறுவதைக் காணமுடியும்.

ஆயினும் குர்ஆனைப் புரட்டிக் கூடப் பார்க்காமல் அறிஞர்கள் மட்டுமே மார்க்கத்தின் அதிகாரிகள் என்று இவர்கள் கருதுவதால் தங்களுடைய சந்தேகங்களை அறிஞர்களிடம் சென்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

திருடன் கையில் சாவியைக் கொடுத்தது போலத்தான். அறிஞர்களும் நம்மைப்போல் பாவங்கள் செய்யக்கூடியவர்களே என்றும் மனிதர்களின் இயல்பான தீமைகள் அவர்களிடமும் இருக்குமென்றும் இவர்கள் குர் ஆனைப் படித்தால். சிந்தித்தால் அறிந்து கொள்வார்கள்.

இத்தகைய முக்கியத்துவம் மிக்க ஷஹாதத் ஏன் குர்ஆனில் கூறப்படவில்லை என்று அறிஞர்களிடம் கேட்டால் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் (48:29) என்று இறைவன் வேறு இடத்தில் கூறுகிறான் அல்லவா என்று திசை திருப்புவர்.

நாம் இப்றாஹீம், மூஸா, ஈஸா, ஆகியோரைக் கூட குர்ஆன் தூதர்கள் (ரசூலுல்லாஹ்.) என்று குறிப்பிடுகின்றதே. மேலும் தூதர்களிடையே எவ்விதப் பேதமும் பாராட்டக்கூடாது என்றும் குர்ஆன் தெளிவாகக் கூறுகிறதே என்றால், அவர்கள் எல்லாம் முன் சென்று விட்ட தூதர்கள் நமக்கு முஹம்மது தானே தூதர் நாம். உம்மத்தே முஹம்மதியா என்ற பாக்கியம் பெற்ற சமுதாயம்

அல்லவா என்று இஸ்லாமிய அறிஞர்கள் என்று கருதப்படுவோர் பெருமை பேசுவர்.

ஏன். முஹம்மதை மட்டும் இவர்கள் கண்களால் கண்டிருக்கின்றனரோ? நம்மைப் பொறுத்தவரையில் முஹம்மதுக்கும் முன் சென்ற தூதர்களுக்கும். என்ன வித்தியாசம் என்பதை பாமர முஹம்மதியர்கள் சிந்திக்க வேண்டும். மேலும் அவ்வாறு நம்மை முஹம்மதின் (உம்மத்) சமூகத்தவர் என்று கூறிக்கொள்வது தவறு. அனைத்து நபிமார்களையும், அவர்களுக்கு இறைவனால் இறக்கப்பட்ட அனைத்து வேதங்களையும் நான் நம்புகின்றேன் என்றே கூற வேண்டும். இதுவே இறைவன் நமக்கிடும் கட்டளையாகும், (3:84)

மேலும் தூதர்களில் சிலரைவிடச் சிலரை இறைவன் மேன்மைப்படுத்தினார் என்ற வசனத்தைக் காட்டி அதன் அடிப்படையில் முஹம்மதுக்கு இல்லாத சிறப்புக்களை அவருக்கு இருப்பதாகக் கூறி அவரை இழிவு செய்வர். இதன் அடிப்படையில் தூதர்களிடையே பேதம் காட்ட வேண்டாம். (2:285) என்ற இறைவசனத்திற்கு மாறு செய்யவும் சிந்திக்காத பாமர முஸ்லிம்களைத் தூண்டி அவர்களை வழி கெடுப்பர். அறிஞர்களை நம்புவோர் மோசம் போய்விடுவார்கள். கடவுளை நம்புவோர் மட்டுமே காப்பாற்றப்படுவர் (9:31)

மேலும் இஸ்லாமிய அறிஞர்கள் இந்த சாட்சியத்திற்கு அறிவுரீதியான(!) சில காரணங் களையும் கூறுவார்கள். அதாவது, முந்திய நபிமார்களையும் தூதர்களையும் முந்திய சமூகத்தினர் இறைவனுக்கு இணையாக்கி விட்டார்கள். எனவே அதனைத் தடுக்கும் முகமாகவே முஹம்மத் நமக்கு இந்த ஷஹாதத்தைக் கற்றுத் தந்தார். இதன் மூலம் நாம் முஹம்மத் இறைவனின் தூதர்தான், இறைவன் அல்ல என்ற உறுதியைப் பெற்றுக் கொள்கிறோம். இதில் என்ன தவறு? இது எப்படி இணைவைப்பு ஆகும்? என்று கேட்கின்றனர்.

குர்ஆனைப் படிக்காதவர்களுக்கு அதனைத் திறந்த மனத்துடன் சிந்திக்காதவர்களுக்கு இத்தகைய வாதங்கள் அறிவுபூர்வமான தாகத் தெரியலாம். ஆயினும் இவர்கள் கூறுவதை நாம் சற்று ஆழ்ந்து சிந்தித்தோமானால் - அவர்கள் வாதத்தில் உள்ள ஓட்டைகள் நமக்குப் புரியும்.

முதலில், அவர்கள் என்ன கூறுகிறார்கள்? முன் சென்ற தூதர்களுக்கும், இறுதி வேதத்தை

இறக்கிய இறைவனுக்கும் தெரியாத ஒன்றை முஹம்மத் கண்டுப் பிடித்தார் என்று கூற வருகின்றார்களா? அல்லது இவர்கள் கூற்றுப்படி, இத்தகைய ஒரு அறிவுபூர்வமான, இறைவன் கூறாத ஷஹாதத்தால் முஹம்மதையும் மற்ற நல்லடியார்களையும் முஹம் மதியர்கள் இணைவைப்பதை விட்டுத் தடுக்க முடிந்ததா? இந்த ஷஹாதத் முஹம்மதியர்களை எந்த விதத்தில் இணைவைப்பை விட்டுத் தடுக்கின்றது? இந்த ஷஹாதத் இல்லையென்றால் முஸ்லிம்கள் முஹம்மதை இறைவன் என்று கூறிவிடுவார்களா? குர்ஆன் அதற்கு இடம் கொடுக்குமா? இந்த ஷஹாதத் இல்லையென்றால் முஹம்மதை முஸ்லிம்கள் இறைவனுக்கு இணையாக்கி விடுவார்கள் என்றால் இந்த ஷ ஹாதத்தை வைத்துக் கொண்டே முஹம்மதுக்கு இறைவனின் தன்மைகளைக் கொடுத்து அவரை இறைவனுக்கு இணையாக்க அவர்களால் முடியாதா? இணைவைக்கும் மனோபாவம் உள்ளவனை இது மாற்றி விடுமா?

மேலும் எந்த ஷஹாதத் இணைவைப்பை விட்டு முஸ்லிம்களைத் தடுக்கும் என்று இவர்கள் கூறுகின்றார்களோ அந்த ஷஹாதத்து தான் முஹம்மதிய முஸ்லிம்கள் முஹம்மதை இறைவனுக்கு இணையாக்கும்படிச் செய்கின்றது என்பதே உண்மையில் நடப்பாக உள்ளது.

முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற இந்த சாட்சியம் தான் ஹதீஸ்களின் தேவையை உண்டாக்குகின்றனது. இறைவனின் செய்தியை விட்டும் முஹம்மதைத் தனியாகப் பிரித்து முஹம்மதின் செய்திகள் என்று மற்றொன்றை உருவாக்க அடிகோலியது. ஒரு பொய்க்கு மற்றொரு பொய்தான் ஆதாரமாகக் கூறப்பட முடியும் என்பதைப்போல், இந்த ஷஹாதத்திற்கு ஆதாரம் ஹதீஸ்கள், ஹதீஸ்களுக்கு ஆதாரம். இந்த ஷஹாதத் அன்றி குர்ஆனின் ஆதாரம் எதுவும் இந்த ஷஹாதத்திற்கில்லை. ஹதீஸ் களுக்கும் இல்லை .

மாறாக, குர்ஆன் முழுவதையும் நாம் ஆய்ந்து பார்த்தால் ஒரே ஒரு இடத்தில் மட்டும் முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற (63:1) இந்த சாட்சியம் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அவ்வசனம் இத்தகைய சாட்சியத்தைக் கூறுபவர்கள் நயவஞ்சகர்கள்தான் என்பதை நமக்கு அறிவிக்கின்றது. அத்தகைய சாட்சியம் தவறு என்றும் நமக்கு அறிவிக்கின்றது.

மேலும் முஹம்மதும். இறைவனும் சமம் என்று கூறினால்தான் இணை

வைப்பு என்று பெரும்பாலான முஸ்லிம்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையில், எல்லாம் வல்ல கடவுளுக்குச் சமமாக எவரும் இல்லை என்பதை மனிதன் அறிந்தே இருக்கின்றான். ஆயினும் இணை வைப்பாளர்கள் சில - கடவுள் தன்மைகளை மற்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலமே இறைவனுக்கு இணைவைக்கின்றனர் என்பதைக் குர்ஆன் நமக்குக் கற்றுக் கொடுக்கின்றது.

கல்லை வணங்குபவன் கூட அந்தக் கல்லை இறைவனுக்குச் சமம் என்று கருதுவதில்லை. சிலை வணக்கம் செய்பவர்களும் அந்தச் சிலைதான் கடவுள் என்று கருதுவதில்லை. யேசுவை வணங்குபவர்களும் இயேசு கடவுளுக்கு எல்லா விதத்திலும் சமமானவர் என்று கருதுவதில்லை . ஆயினும் இவர்கள னைவரும் கடவுளின் சில தன்மைகளை சிலைகளுக்கோ மற்ற மனிதர்களுக்கோ கற்பிப்பதன் மூலமே இணைவைத்தவர்கள் ஆகின்றார்கள் என்பதைக் குர்ஆன் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

அதுபோலவே. தர்ஹாவுக்குச் சென்று அவ்லியாக்களிடம் பிரார்த்திப்பவர்களும் அவர்களை இறைவனுக்குச் சமமானவர்கள் என்று கருதுவதில்லை. நம் பிரார்த்தனையைச் செவியேற்று இறைவனிடம் பரிந்துரை செய்து பெற்றுத் தருவார் என்றே நம்புகின்றனர். அவ்வாறே ஹதீஸ்களைப் பின்பற்றி இந்த ஷஹா தத்தைக் கூறுபவர்களும் முஹம்மத் இறைவனுக்குச் சமமானவர் என்று கூறுவதில்லை. ஆயினும் ஹதீஸ்களின் அடிப்படையில் சில கடவுள் தன்மைகளை முஹம்மத் நபிக்குக் கொடுப்பதன் மூலமே அவர்களும், இணை வைத்தவர் களாகின்றனர்.

ஹதீஸ்களின் அடிப்படையில் செயல்படுவதால் இவர்கள் எவ்வாறெல்லாம் இணைவைக் கின்றனர் என்பதை ஒவ்வொரு விஷயமாக குர் ஆனின் ஒளியில் காண்போம்.

முதலில், இறைவன் மட்டுமே தனித்தவராக வழிபடப்பட வேண்டும். துதிக்கப்பட வேண்டும். என்பது குர்ஆன் அதன் மாணவர்களுக்குக் கூறும் அடிப்படைப் பாடம். ஆயினும் இந்த ஷஹாதத் (சாட்சியம்) இறைவனைத் தனித்தவராக நினைவு கூர்வதை விட்டும் முஹம்மதியர்களைத் தடுத்து விடுகின்றது. மிகவும் அடிப்படையான சாட்சியத்தில் கூட இவர்கள் இறைவனைத் தனித்து நினைவு கூராமல் முஹம்மதுடன் சேர்த்தே

நினைவு கூருகின்றனர். மேலும் அன்றாடத் தொடர்புத் தொழுகையிலும் அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹீ' என்ற வாசகத்தை உச்சரிப்பதன் மூலம், நபியே. உம்மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும் அருளும் அபிவிருத்தியும் நிலவுவதாக என்று முன்னிலைச் சொல்லால் இறந்து விட்ட, செவியேற்க முடியாத நபியை அழைப்பதன் மூலம், இவர்கள் அன்றாடம் முஹம்மத் நபியை இறைவனுக்கு இணை வைக்கின்றனர்.

இறந்து விட்ட ஒரு மனிதரை அன்றாடம் முன்னிலைச் சொல்லால் அழைக்கின்றார்கள் என்றால் எல்லா நேரங்களிலும், எங்கிருந்தாலும் செவியேற்கக் கூடிய இறைவனின் தன்மையை முஹம்மது நபிக்குக் கொடுக்கின்றார்கள். அது இறைவனுக்குச் செய்யப்படும் தெளிவான இணைவைப்பல்லவா?

மேலும் யார் ஸலவாத்துக் கூறினாலும் அதனை மலக்குகள் மூலம் முஹம்மத் நபி அறிந்து கொள்வார் என்று இவர்கள் நம்புகின்றனர். உலகை நீத்து விட்ட முஹம்மத் இறைவனிடத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கின்றார். அதை விடுத்து இவர்களுடைய ஸலவாத்துக்களுக்குப் பதில் கூறிக் கொண்டிருக்கவில்லை? மேலும் எத்தனை பேர். எங்கிருந்து பேசினாலும் செவியேற்கக் கூடிய இறைவனின் தன்மையை . இதன் மூலமும் முஹம்மதுக்குக் கொடுக்கின்றனர். மலக்குகள் மூலம் தானே அவர்கள் அறிந்து கொள்கிறார்கள் என்று வாதிக்க வருபவர்களை எல்லா நேரங்களிலும் செவியேற்கக் கூடிய இறைவனின் தன்மையில் முஹம்மதுக்கு ஒரு பங்கு கொடுக்கப்படுகின்றதா இல்லையா என்பதைச் சிந்திக்குமார் கேட்டுக்கொள்கிறோம். இறை வனுக்கு அவர் எல்லாவிதத்திலும் சமம் என்றா கூறமுடியும்?

மேலும் எங்கெல்லாம் இறைவனின் பெயர் நினைவு கூரறப்படுகிறதோ அங்கெல்லாம் முஹம்மத் நபியையும் இவர்கள் நினைவு கூருகின்றார்கள். எந்த அளவுக்கென்றால் இறைவனைத் தொழும் பள்ளி வாசல்களில் கூட ஒருபுறம் முஹம்மது என்றும் மறுபுறம் அல்லாஹ் என்றும் பெயர்களைப் பதித்து வைத்திருக்கின்றார்கள். அல்லாஹ் என்ற பெயர் தனித்துப் பதிக்கப்பட்ட ஒரு பலகையையோ, அலங்கார அட்டையினையோ, கடையில் சென்று வாங்க வேண்டும் என்று எண்ணினால் நம்மால் வாங்க முடியாது. ஜோடியாக முஹம்மத் என்ற பெயர் பதிக்கப் பட்டவற்றையும் வாங்கும்படி

வற்புறுத்தப்படுவோம். ஜோடியா கத்தான் அவர்கள் தயாரிக் கின்றார்கள்! அவ்வாறு தனித்து வேண்டும் என்றால் அதன் விலையை உயர்த்தியே தருவார்கள். அந்த அளவு இறைவனுக்கு முஹம்மதை இணைவைப்பதில் புரையோடிப் போயிருக்கின்றது இன்றைய முஹம்மதிய சமூகம். ஏன் இவர்கள் இவ்வாறு இறைவனைத் தனித்தவராக நினைவு கூர மறுக்கின்றார்கள்? உண்மையில் அவர்களின் உள்ளங்கள் மறுமையை நம்பவில்லை என்பதுதான் காரணம் என்ற இரகசியத்தைக் குர்ஆன் போட்டு உடைக்கின்றது (39:45)

மேலும் ஹதீஸ்களின் அடிப்படையில் முஹம்மத் இவர்களை நரகிலிருந்து (ஷஃபாத்) பரிந்துரை மூலம் மீட்டெடுப்பார் என்று மனப்பால் குடிக்கின்றனர். அனைத்தையும் அறிந்தவரிடத்தில் அவ்வாறு அறியாத ஒருவர் எதைப் பரிந்துரை செய்ய முடியும்? இதை நன்கறிந்திருந்தும். குர்ஆனுக்கு மாறான இத்தகைய நம்பிக்கையை இவர்கள் வைத்திருக்கின்றார்கள் என்றால், இறைவனின் கருணையில், அறிவில் நபிக்குப் பங்கு கொடுக்கின்றனர் இல்லையா? மேலும் முஹம்மத் நபி நமக்குப் பரிந்துரை செய்ய வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்ப்பது இறைவனின் அருளில் இவர்கள் நம்பிக்கையிழந்து விட்டார்கள் என்பதையும் காட்டுகிறது. நிராகரிப்போர். நம்ப மறுப்போர் மட்டுமே இறைவனின் கருணையில் நம்பிக்கை இழப்பார்கள் என்று குர் ஆன் கூறுகின்றது. (39:53)

மேலும் இறைவனின் வார்த்தைகளான குர் ஆனுக்கு இணையாக மனிதர்களின் வார்த்தைகளான ஹதீஸ்களை நம்புவதாலும் இவர்கள் இறைவனுக்கு இணைவைக் கின்றனர். அடிமை. எஜமானின் வார்த்தைகளுக்கு மட்டுமல்லவா் கட்டுப்பட வேண்டும்? இவர்களுக்கு இரண்டு அல்லது அதற்கும் அதிகமான எஜமானர்கள் உள்ளனர் என்பதை இவர்களுடைய இத்தகைய நம்பிக்கை வெளிப்படுத்துகின்றது.

முஹம்மதியர்களுக்கு இரண்டு அல்லது அதற்கும் அதிகமான எஜமானர்கள் அல்லது கடவுளர் என்பது எப்படியென்றால், அவர்கள் இறைவனை முழுமையாக தனித்து நம்புகிறோம் என்று கூறிவிட்டு முஹம்மத் என்ற மனிதரையும் முழுமையாக நம்புகின்றனர். மேலும் அவர்களுடைய கூற்றுப்படியே குறைந்த பட்சம் | லட்சம் நபித்தோழர்களையும் முழுமையாக நம்புகின்றனர். மேலும் குறைந்த பட்சம் 3 லட்சம் ஹதீஸ் அறிவிப்பாளர்களையும் முழுமையாக நம்புகின்றனர். இன்னும்

அன்றைய இமாம்கள், இன்றைய நவீன இமாம்கள் ஆகிய இலட்சக்கணக்கான கடவுளர்கள் உண்டு. ஹதீஸ்களை நம்புபவர்களுக்கு. நம்பிக்கை யாளர்களுக்கு முழுமையான நம்பிக்கைக்குரியவர் இறைவன் மட்டுமே. முஃமின் - முழுமையான நம்பிக்கை குரியவர் என்பது குர்ஆனில் கூறப்படும் இறைவனுடைய தன்மைப்பெயர் ஆகும்.

மேலும் முரண்பாடான ஹதீஸ்களின் அடிப்படையில் தெளிவான குர்ஆனின் வசனங்களுக்கு மாறாக இவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் இணைவைப்பே ஆகும். இவ்வாறு முழுக்க முழுக்க இணைவைப்பில் மூழ்கியிருக்கின்றனர் முஹம்மதியர்கள்.

மேலும், இணைவைக்கின்றோம் என்பதையே அவர்கள் அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற வினோதமான இந்நிலையையும் குர்ஆன் விவரிக்கவே செய்கின்றது.

நாம் மனிதர்கள் அனைவரையும் ஒன்று கூட்டும் அந்த (தீர்ப்பு) நாளில் நாம் இணைவைத்தவர்களைக் கேட்போம். இறைவனை அன்றி நீங்கள் உருவாக்கிய உங்களுடைய இணைத்தெய்வங்கள் எங்கே?' எங்களுடைய இரட்சகரான கடவுளாகிய உம்மீது ஆணையாக, நாங்கள். ஒரு போதும் இணை வைத்து வழிபடவில்லை' என்பதே அவர்களுடைய பதிலாக இருக்கும். அவர்கள் எவ்வாறு தங்களுக்குத் தாங்களே பொய்கூறிக் கொண்டார்கள் என்பதையும் அவர்கள் ஏற்படுத்திய இணைத் தெய்வங்கள் எவ்வாறு அவர்களைக் கைவிட்டு விட்டன என்பதையும் கவனித்துப் பாரும்': (6:22-24) மேலும் பார்க்க 13:16. 23:84-90.

ஹதீஸ்களின் தாக்கத்தை விட்டு விலகி, தங்களுக்குப் புரியக் கூடிய எந்த - ஒரு மொழியிலும் குர்ஆன் மொழிபெயர்ப்பை முஹம்மதியர்கள் படிக்காதவரை, திறந்த மனத்துடன் இறைவனின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முயற்சிக்காதவரை அவர்கள் இஸ்லாம் (இறைவனுக்கு மட்டும் அடிபணிதல்) என்ற மார்க்கத்தின் அடிப்படையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாது.

பயமுறுத்தும் அறிஞர்களை நம்பாமல் அர்ரஹ்மான் - காருண்யராகிய நம் கடவுள், நம் இரட்சகர் குர்ஆனை நமக்குக் கற்றுக் கொடுப்பார் (55:1-2) என்று அவரை மட்டும் தனித்து - நம்பிக்கை கொண்டவர்களாகக் குர் ஆனை அணுகினால் அன்றி . அவர்கள் சாத்தானின் வலையிலிருந்து மீளவும் முடியாது.

▲▲▲

# செயல்களின் மூலம்

# மார்க்கப் பிரச்சாரம்

ஒவ்வொரு சமுதாயத்தாரும் அவரவர் இறை வழிபாட்டு கொள்கைகளை தங்களுக்குக்கென தனித்தனி பாணிகளிலும் அல்லது ஒரே பாணியில் பலரும் பிரசாரம் செய்து வருவதை நாம் காணலாம். உதாரணத்திற்கு சிறு சிறு பிரசுரங்கள். தங்களுக்கென பத்திரிக்கை, ரேடியோ நிகழ்ச்சி, டி.வி. மற்றும் சிறந்த பேச்சாளர்கள் மூலம் பரப்பி வருவதை நாம் காணலாம். சொல்லக்கூடிய கருத்தின் தன்மையை வைத்தும். பேச்சாற்றலை வைத்தும் மக்களிடையே சில காலம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்து பின்பு சொல்லக் கூடிய கருத்து உண்மையில்லாத காரணத்தால் ஸ்திரத்தன்மை மழுங்கிப் போவதை நாம் காணலாம்.

ஆனால் நாம் இன்று ஒரு மகத்தான முடிவுக்கு வந்திருக் கின்றோம். அதாவது கடவுளின் வேத வரிகள் மட்டுமே வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்க தகுதி படைத்தது என்று அத்தாட்சி களுடன் அறிந்து உணர்ந்து தெரிந்துள்ளோம். மகத்துவமிக்க வேதத்தில் கடவுள். நமக்குத் தெரிந்த உண்மைகளை. - நன்மைகளை மற்றவருக்கும் காண்பித்து அல்லது செயல்படுத்த தூண்டு கோலாக அமைய வேண்டும் என விரும்பி கட்டளையிடுகிறார்.

எத்தனையோ இறைவேதங்களை இறைவன் பற்பல உலக மொழிகளில் இறக்கியருளி யிருக்கின்றார். அதில் இறுதி வேதம், குர்ஆன். அது போதிக்கும், மற்றும் ஒவ்வொரு மனிதனும் கடை பிடித்து ஒழுக வேண்டிய தினசரி பின்பற்ற வேண்டிய சில நடைமுறைகள்

1) பொறுமை, 2) மற்ற மனிதர்கள் மன்னித்தல் 3) கோபத்தை அடக்குதல் 4) வாக்குறுதி காப்பாற்றுதல் 5) பொய். களவு, மது, சூது, கடும்வட்டி, விபச்சாரம் போன்றவற்றை தவிப்பது 6) தாய் தந்தையரை பேணுவது 7) உறவினர்களை. ஆதரிப்பது ஏழைகளுக்கு உதவுவது 8) புறம் பேசக்கூடாது அன்பு, பண்பு, பாசம், நேசம், நீதி, நேர்மைக்கு உட்பட்ட எல்லா அம்சங்களில் எதையும் தவறாமல் கடைபிடிப்பது தான். கடவுளுக்கு கட்டுப்பட்டு நடப்பது என்ற உண்மையை

மற்ற மக்களுக்கு ஏவுவது அல்லது தூண்டு கோலாக இருப்பது நம் மீது கடமையும் நன்மையும் கூட.

"மனிதர்களில் தோற்று விக்கப்பட்ட சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் நல்லதை செய்ய ஏவுகிறீர்கள். தீயதை விட்டும் விலக்குகிறீர்கள்." குர்ஆன் 3:110

நீங்கள் வேதத்தை ஓதிக் கொண்டே நன்மை செய்யுமாறு ஏவி, உங்களையே மறந்து விடுகிறீர்களா? நீங்கள் சிந்தித்து புரிந்து கொள்ள வேண்டாமா? 2:44 மேற்கண்ட வசனங்களின் மூலம் இறை நம்பிக்கையாளர்கள், இறை கட்டளைக்கு கட்டுப்பட்டு நடக்க விரும்பும் உண்மையாளர்கள் அறிவது நாம் செய்யாத ஒன்றை மற்றவர்கள் செய்யச் சொல்லித் தூண்டுவது அல்லது உபதேசிப்பது கூடாது. அது இறை கட்டளைக்கு மாற்றமானது ஆகும்.

இங்கு ஒரு கருத்தை நாம் நன்றாக புரிந்து கொண்டு பிரித்தறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது.

குர்ஆனில் நாம் பெற்றுக் கொண்ட உபதேசங்களை மற்றவர் களுக்கு சொல்லி காண்பிப்பது அல்லது அறிவிப்பது. இதை நாம் செய்தாலும், அல்லது செய்யாமால் விட்டு விட்டாலும் நம் மீது எந்த கடமையும் இல்லை .

ஆனால்

இறைவன் வாக்களிக்கும் சிறந்த சமுதாயமாக நாம் ஆக வேண்டும் எனில் இறைவன் தன்னுடைய இறுதி வேதத்தில் நமக்கு கோடிட்டு காட்டும். நம்மால் நிச்சயமாக நடைமுறை படுத்த கூடிய செயல்களை முதலில் நாம் பின்பற்றி கொண்ட பிறகே மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும். இதற்கு இறைவன் நமக்கு கூறும் வழிகாட்டுதலை காண்போம்.

முற்பகல் மீது சத்தியமாக, நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கிறான். ஆயினும் எவர்கள் நம்பிக்கை கொண்டு நல்ல செயல்கள் செய்து. உண்மையை கொண்டு ஒருவருக்கொருவர் ஏவி, மேலும் பொறுமையைக் கொண்டு ஒருக்கொருவர் உபதேசிக் கிறார்களோ அவர்கள் தவிர (I03-1-3)

இதன் மூலம் நம்பிக்கையுடன். பொறுமையாளர்களாக சத்தியமான குர்ஆனின் வழிகாட்டுதலை மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டும் என தெளிவாய் அறிகிறோம். அவ்வாறு செய்யாத வரை நாம் நஷ்டத்தில் இருப்பதாக இறைவன் கூறுகிறார்.

மேலும் இதே மூஸா விதமாக நபிக்கு 7:145 வது வசனத்திலும் முஹம்மது நபிக்கு 7:157 வது வசனத்திலும் இறைவன் வாக்களிக்கிறார்.

எனவே நாம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவோம் அதாவது இன்றைய நடைமுறையில் தினசரிபத்திரிக்கை, வார, மாத பத்திரிக்கைகள், ரேடியோ நிகழ்ச்சி, டெலிவிஷன் நிகழ்ச்சி. இன்னும் மேடை பிரச்சாரம் என பல வழிகளிலும் பல மதத்தை சேர்ந்தவர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியன அவரவர் கோட்பாடுகளை மக்களை சென்றடைய வைக்க முயற்சிக்கின்றன. ஆயினும் புள்ளி விபரக் கணக்கின்படி உலக முழுவதிலும் கொலை, கொள்ளை, விபச்சாரம், மது. சூது மற்றும் எல்லாவகையான குற்ற செயல்களின் சதவீதமும் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டேயிருக்கிறது என்பதை பொது அறிவு உடையவர் எவரும் மறுக்க முடியாது. அது நிதர்சனமான உண்மையும் கூட. ஆகவே இறைவனுக்கு கட்டுப்பட்டு நடக்க விரும்பும் உண்மை நம்பிக்கையாளர்கள். நம்பிக்கை யாளர்களுக்கு இறைவன் குர்ஆனில் வாக்களிக்கும் பிரதி பலன்களை அடைய செய்ய வேண்டுமெனில் நம்முடைய நடைமுறையை சற்று சிந்தித்து மாற்றி கொள்ள வேண்டும் அவ்வாறு மாற்றிக் கொண்டால் நிச்சயம் ஒரு பெரிய விளைவு அல்லது மாற்றம் ஏற்படும் என்பதற்கு சரித்திர ஆதாரங்கள் நம் கண் முன்னே காணக் கிடைக்கிறது.

அதாவது 1400 வருடங்களுக்கு முன்பு முஹம்மது நபி அவர்கள் இறுதி இறைவேதத்தை பெற்று சுமார் 23 வருடங்கள் அதில் உள்ள வழிகாட்டுதல் படி நடந்து காட்டி மற்றவர்களையும் அதாவது முழு உலகத்தையும் கவர்ந்து விட்டிருந்தார்கள் என்ற கருத்தை எந்த அறிவுடையவரும் மறுக்கவே முடியாது.

முஹம்மத் இறைவனின் தூதர் இறைவனின் உதவியுடன் இறைவழி காட்டுதல் படி நடந்து காட்டியதால் இறைவன் தான் அளித்த வாக்குறுதியை இந்த உலகத்திற்கு உண்மை படுத்தி காட்டியதை நாம் சரித்திரங்கள் மூலம் அறிந்துள்ளோம்.

அதாவது இந்த உலகின் குறிப்பிடத்தக்க பெரும் நிலப்பரப்பை அவர் சார்ந்த வர்களின் ஆட்சிக்கு உட் படுத்தினார். - இறைவன்.

இன்று வரை இந்த மனித சமுதாயத்தின் ஒரு ஒப்பற்ற மனிதராக அவர் வாழ்ந்து மறைந்திருக்கிறார் என்பதை யாராலும் மறக்கவும். மறுக்கவும் முடியாது.

இறைவன் முஹம்மத் என்ற இந்த மனிதரிடம் நமக்கு ஒரு முன் மாதிரி இருப்பதாக இறுதி வேதத்தில் அறிவிக்கின்றார்.

அதாவது இறை நம்பிக்கை கொண்ட அனை வரும். அல்லது இறைவனின் கட்டளைக்கு கட்டு பட்டு நடக்க விரும்பும் அனை வரும் இறைவனின் உண்மையான். பாதுகாக்கப்பட்ட இறுதி வழிகாட்டுதல் படி வாழ்ந்தால் மட்டுமே இந்த உலகத்தினரை கவர முடியும் என்ற ஒரு முன் மாதிரியை நாம் பெற முடிகிறது.

உலகத்து மக்களை நாம் நம் நற்குணம் மற்றும் செயல்களால் கவர்ந்து விட்டால் நாம் இரண்டு வேளைகள் இறைவன் கட்டளைப் படி செய்து முடிக்கிறோம் அதாவது

1) இறைவனின் கட்டளைக்கு கட்டுப்பட்டது

2) மற்றவர்களை நாம் செய்தது போல் ஏவியது அல்லது தூண்டியது.

காரணம் இன்றைய உலகில் எல்லா மனிதர்களும் ஏதாவது ஒரு உருவத்தில் அவரவர் வாழும் இடத்திற்கு ஏற்ப யாரையாவது பின்பற்றுகின்றனர் அல்லது யாராலாவது கவரப்பட்டு அவர்கள் செய்வதை போல் அல்லது அவர்களை போல் தங்கள் நடை, உடை, சொல், செயல்களை மாற்றி கொள்வதை நடை முறையில் காண்கின்றோம்.

இறுதி வேதத்தில் அந்த வேத வழிகாட்டுதல் படி நடப்பவர்களுக்கு இந்த உலகில் பல அரிய விஷயங்களை தருவதாக வாக்களிக்கிறார் இறைவன். நாம் அதன் படி நடந்தால் நிச்சயமாக நாம் அவற்றை அடைந்தே தீருவோம்.

இறைவாக்கு என்றும் மாறாது எந்த ஒரு சமுதாயமும் அவர்கள் தங்களை தாங்களே மாற்றி கொள்ளாத வரையில் இறைவன் அவர்களை மாற்றுவதில்லை. (குர்ஆன்)

எனவே

சிந்திக்கும் தன்மையை தன்னகத்தே கொண்ட எல்லா மனிதர்களும் இறைவனுக்கு பிடித்தமானவர்களாக மாற வேண்டுமானால். இறுதி வேதம் குர்ஆனை - நன்கு படித்து, சிந்தித்து வழிகாட்டுதலை தெளிவாக தெரிந்து அதன் படி நடக்க ஆரம்பித்தாலே போதுமானது அவர்கள் இறைவனின் விருப்பத்திற்கு உரியவர்களாக, இறைவனின் கட்டளைகளுக்கு கட்டுப் பட்டவர்களாக, 'உண்மை நம்பிக்கையாளர்களாக மாறிவிடுவர்கள். இறைவன் வாக்களிக்கும் எல்லா அருட் கொடைகளையும் அந்த செயல்கள் பெற்று தந்து விடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இன்ஷா அல்லாஹ்.

நபி வழியில் நாமும் நம் செயல்களைக் கொண்டு பிரச்சாரம் செய்வோம்.

பிரச்சாரம் = தூண்டுதல். தாவா

✵ ✵ ✵

# கடவுளின் அத்தாட்சிகள்

## அன்றும் இன்றும்

சோதனைக்கா பூமிக்கு அனுப்பப்படும் முன்னர் கடவுள் மனிதர்களிடம் கூறினார் நாம் கூறினோம். "நீங்கள் அனைவரும் அங்கிருந்து இறங்கி விடுங்கள் என்னிடமிருந்து நேர் வழிகாட்டல் உங்களுக்கு வரும்போது எவர் என்னுடைய நேர்வழிகாட்டலை பின்பற்று கிறாரோ அவர்களுக்கு அச்சமிருக்காது அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்" (2:38)

அவ்வாறு நேர் வழிகாட்டல் வரும் போது அந்த நேர் வழிகாட்டல் இறைவனிடமிருந்து வந்தது தான் என்பதற்கான தெளிவான ஆதாரங் களையும் இறைவன் தருகின்றார்.

குர்ஆனில் கடவுள் கூறுகின்றார் "நாம் அச்சமூகத்தாரின் வரலாறுகளை உமக்கு விவரிக்கின்றோம்: அவர்களுடைய தூதர்கள் அவர்களிடம் தெளிவான அத்தாட்சி களுடன் வந்தார்கள். ஆனால் அவர்கள் முன்னரே நிராகரித்ததை (திரும்ப) ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை இறைவன் இவ்விதம் நிராகரிப்போரின் நெஞ்சங்களில் முத்திரையிட்டு விடுகின்றார். (7:10)

நம்பிக்கையாளர்களுக்குப் போதுமானதாக இருக்கும் இறைவனின் அத்தாட்சிகள். நிராகரிப்பாளர்களுக்கு காட்டப்பட்ட பின்னரும் அறிவில்லாமல் விதண்டா வாதங்கள் செய்வார்கள் கடவுள் 2:118ல் பேசுகிறார்.

"அறிவில்லாதவர்கள் கூறுகின்றனர். "இறைவன் நம்மிடம் பேசினால், அல்லது எங்களுக்கு ஏதேனும் அற்புதங்கள் வந்தால் !" இவர்களுக்கு முன்னர் மற்றவர்களும் இவ்வாறான கூற்றுகளையே கூறினார்கள். அவர்களுடைய மனங்கள் ஒப்பான வையாக , உள்ளன. நம்பிக்கையில் உறுதி கொண்ட வர்களுக்கு நம்முடைய அற்புதங்களை நாம் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றோம்". (2:118)

மேலும் நாம் குர்ஆனை ஆராய்ந்து பார்த்தால் ஒவ்வொரு காலகட்டதிலும் மானுட சமூகத்தின் அறிவு வளர்ச்சிக் கேற்ப அவர்களுக்கு இறை அத்தாட்சிகள் கொடுக்கப் படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம் உதாரணமாக ஸாலிஹ் நபியின் காலத்தில் நம்பிக்கையா

ளர்களுக்கு ஒரு ஒட்டகம் அத்தாட்சியாக இருந்த அதே சமயம் அது நிராகரிப்பாளர்களுக்குப் போதுமானதாக இருக்க வில்லை. அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட இறைவனின் அத்தாட்சியான அதனைக் கொலை செய்துவிடுகின்றனர் என்று நாம் குர்ஆனில் கற்றுக் கொள்கிறோம். அடுத்து இப்றாஹீமின் காலத்தில் அவருக்காக மூட்டப்பட்ட நெருப்பு கடவுளின் ஆணைப்படி குளிர்ந்து பாது காப்பானதாக மாறியது அச்சமூகத் தாருக்கு உரிய அற்புதமாக இறைவனின் அத்தாட்சியாக இருந்தது. அந்த அத்தாட்சியும். கூட நம்பிக்கைய ாளர்களுக்குப் போதுமான தாக இருந்தது அதே சமயம் நிராகரித் தோருக்கு போதுமானதாக இல்லை.

தொடர்ந்து மூஸாவின் காலத்தில் மூஸாவின் கைத்தடி பாம்பாக மாறி சூனியக்காரர்களின் தந்திரங்களை விழுங்கி விடுவதும் மேலும் மூஸாவின் கை ஒளி வீசக் கூடியதாக அமைந்ததும் அவர்களுக்குரிய அத்தாட்சியாக உள்ளது இவ்வற்புதமும் நம்பிக்கை யாளர்களுக்கு போதுமான தாக இருக்கும் அதே சமயம் நிராகரிப் பாளர்களை மேலும் இறை மறுப்பில் தள்ளக் கூடியதாக அமைக்கின்றது.

பின்னர் ஈஸாவின் காலத்தில் அவர் இறை அனுமதியுடன் பறவைகளைக் களிமண்ணால் செய்து அவற்றை உயிர்ப்பிப்பது குருடர் களுக்குப் பார்வை அளிப்பது குஷ்ட ரோகிகளைக் குணப்படுத்துதல் இறந்து விட்டவர்களை உயிர்ப்பித்தல் ஆகியவை அச்சமூகத்தாருக்கு உரிய அற்புதமாக அத்தாட்சியாக உள்ளது. இவையும் கூட நம்பிக்கையாளர்களுக்குப் போதுமான தாக இருந்த அதே சமயம் நிராகரிப் போருக்குப் போதுமானதாக அமைய வில்லை .

முஹம்மதின் காலத்தில் அரபியர்கள் கல்வி கேள்விகளில் இலக்கிய இலக்கணங்களில் சிறந்து விளங்கினார்கள் அவர்களுக்கு குர் ஆன் ஓதிக்காட்டப்படுவதே அவர்களுக்குரிய அத்தாட்சியாக அமைந்ததைக் குர்ஆன் கூறுகின்றது (29:51) அந்த அற்புதமான குர்ஆன் நம்பிக்கையாளர்களுக்குப் போது மானதாக இருந்த அதே சமயம் நிராகரிப்பாளர்களை மேலும் நிரா கரிப்பில் மூழ்கடிக்கின்றது.

ஒவ்வொரு காலத்திலும் இறைவனின் துய்மையான மார்க்கம் சிதைக்கப்படும் போது அவர் தூதர்களைத் தொடர்ந்து அனுப்பி அவர் அங்கீகரித்த துாய்மையான மார்க்கமான ஓரிறைக் கொள்கையை மீண்டும் புதுப்பிக்கின்றார். முஹம்மது கொண்டு வந்த ஓரிறைக் கொள்கையை,

நிராகரிப்பாளர்கள் முஹம்மதையும், நல்லடியார்களையும் இறைவனுக்கு இணையாக்கி மீண்டும் சிதைத்து வைத்துள்ள இந்நிலையில் தன்னுடைய மார்க்கத்தைப் புதுப்பிக்கவே குர் ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்பதை ஸ்தாபிக்கவே இறைவன் ரஷாதை அனுப்பினார்.

அவரும் எல்லாத்துரதர்களையும் போலவே கலப்பின்றி இறைவனை மட்டும் - தனித்து வழிபடுங்கள். இறைவனின் வேதத்தை மட்டுமே பின்பற்றுங்கள் என்றே பிரசாரம் செய்தார்

இன்றைய மனிதன் விஞ்ஞான ரீதியில் மிகவும் முன்னேறியவனாக உள்ளான் இது கம்ப்யூட்டர் யுகம் முந்திய தூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட அத்தாட்சிகள் இன்று போதுமானதாக அமையாது மேலும் குர்ஆன் இறுதி வேதமாக இருப்பதால் அதன் அத்தாட்சி ஒரு சாராருக்கு மட்டும் தெரியக் கூடியதாக அமையாமல் அனைவரும் காணக் கூடிய அத்தாட்சியாக அது அமைய வேண்டும் அத்தகைய அத்தாட்சியாகவே இறைவன் குர்ஆனில் அமைக்கப்பட்டுள்ள 19ன் அடிப்படையிலான கணிதக் குறியீட்டு அற்புதத்தை ரஷாதின் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தினார். அம்மாபெரும் அற்புதம் அல்குர்ஆன் மட்டுமே மார்க்க ஆதாரம் என்பதை ஆதார பூர்வமாக நிருபிக்கின்றது. மேலும் அல்குர் ஆனின் ஒவ்வொரு எண்ணும் எழுத்தும் அட்சரம் பிசகாமல் இறைவன் இறக்கியருளிய வண்ணமே பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதையும் உலகுக்கு அறிவிக்கின்றது. *74 : 31 ல் இறைவன் கூறியபடி 19 என்ற மாபெரும் அற்புதம் பற்பல பணிகளைச் செய்வதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம். இது கம்ப்யூட்டர் யுகம் இன்று மனிதனின் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் அவர்களுக்கு உதவி செய்து வருகின்றது எல்லா மனிதர்களும் கம்ப்யூட்டரால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவிகளை அடைகிறார்கள். மேலும் கம்ப்யூட்டரின் மிக முக்கிய வெளிப்பகுதியான கீ போர்டில் எண்களும் எழுத்துக்களும் மட்டுமே பிரதானமாக உள்ளன. அந்த எண்களையும் எழுத்துகளையும் இணைத்து மனிதனின் கற்பனைக் கெட்டாத. சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையான மாபெரும் அற்புதத்தையே இன்றைய மானிட சமூகத்திற்கு இறைவன் அத்தாட்சியாக வழங்கி உள்ளார் வழமை போலவே, இம்மாபெரும் அற்புதமும் நம்பிக்கையாளர்களுக்கு இறைச் ய்ெதியை விளங்கிக் கொள்ளப் போதுமானதாக உள்ளது. அதே சமயம் நிராகரிப்பாளர்களை அவர்க ளுடைய நிராகரிப்பில் குருட்டுத்தனமாக மூழ்கும்

படி செய்கின்றது. 27:82ல் இறைவன் உவமானமாகக் கூறும் பேசும் விலங்கான கம்ப்யூட்டர் இன்று மனிதர்கள் தங்களுடைய இரட்சகரின் வசனங்களில் (அல்குர் ஆனில்) உறுதி கொண்டவர்களாக இல்லை என்று உலகுக்கு உரைத்து கொண்டிருக் கின்றது. இன்றைய கம்ப்யூட்டர்கள் மனிதர்களுடன் பேசுகின்றன என்பது அனைவரும் அறிந்த நிருபணமான விஷயமாகி விட்டது. அது கூறும் செய்திக்குச் செவிசாய்க்காத நிராகரிப்பாளர்கள் தண்டனையைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இறைவனின் அத்தாட்சிகளைப் பொய்ப்பிப்பவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதே குர்ஆன் நமக்குக் கூறும் படிப்பினை.

●○●

# அல்குர்ஆன் - நிரந்தரத் தூதர்.

அல்குர்ஆன் வசனங்கள் II : | - 2 கூறுவது.

அலிஃப், லாம். ரா. இவ்வேதத்தின் வசனங்கள் மிகச்சரியாக்கப்பட்டு பின்னர் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த ஞான முடைய. நன்கறிந்த ஒருவரிடமிருந்து வருகின்றது (II:1)

இப்பிரகடனத்துடன் : கடவுளைத் தவிர வேறு எவரையும் வழிபடவேண்டாம். எச்சரிப்பவனாகவும், நற்செய்தி கொண்டு வருபவனாகவும் நான் அவரிடமிருந்து வந்துள்ளேன். (II:2)

மேற்கண்ட இரு வசனங்களையும் படிப்பவர்கள் 2 ம் வசனத்தைக் கூறுவது முஹம்மத் நபி அல்ல. குர் ஆன் தான் அதனைக் கூறுகின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். முதல் வசனம் 'அலிஃப்' 'லாம்' 'ரா' என்று குர்ஆனின் மாபெரும் அற்புதத்தை நினைவூட்டித் துவங்குகின்றது. தொடர்ந்து வேதம் விவரிக்கப்படுகிறது. இரண்டாம் வசனம் பிரகடனம் செய்கிறது. இங்கே பிரகடனம் செய்வது குர் ஆன் தான். அது தான் நம்மிடையே என்றென்றும் உயிருடன் இருக்கும் நிரந்தரத் தூதர்.

கடவுளுக்குக் கட்டுப்படுங்கள். தூதருக்குக் கட்டுப்படுங்கள் என்று இறைவன் குர் ஆனில் கூறுவதன் பொருள் 'கடவுளுக்கும் அவருடைய தூதர்கள் கொண்டு வரும் தூதுச் செய்திக்கும் கட்டுப்படவேண்டும் என்பதையன்றி வேறில்லை. முஹம்மத் இறைவனிடமிருந்து பெற்ற தூதுச் செய்தி அல்குர்ஆன் மட்டுமே, (6:19) எனவே முஹம்மதின் மேல் உண்மையான அன்பு கொண்டவர்கள் அவர் கொண்டு வந்த தூதுச் செய்தியான அல்குர் ஆனுக்கு மட்டும் கட்டுப்பட வேண்டுமே தவிர அவர் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட பொய்ச் செய்திகளுக்கு அல்ல.

# இஸ்லாமியப் பெயர்கள்

இன்றைய முஸ்லீம்கள் தங்களுடைய மார்க்கம் பரிபூரண ஏகத்துவக் கொள்கையை உடையது என்று பெருமையுடன் பறைசாற்றுவர். மானிடர்களின் உள்ளுணர்விலேயே இறைவன் ஏகக்துவக் கொள்கையைப் பதித்து விட்டதால் இணை வைத்து வணங்கிக் கொண்டிருக்கும் வெவ்வேறு . மதம் சார்ந்த மனிதர்களிடையே இக் கருத்து சரியென்று உணரப்படும் வெளிப்படையான இணை வைப்பிலிருந்து மீண்டு கொள்ளவே மனித மனம் விரும்பும். மனிதர்கள் அனைவரும் உலகுக்கு அதிபதி ஒருவர் மட்டுமே என்பதை நன்கறிந் திருக்கின்றனர்

எனவே வெவ்வேறு மதம் சார்ந்த கடவுளுக்கு இணை வைத்து வணங்கிக் கொண்டிருந்த மனிதர்கள் பலர் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையான ஓரிறைக் கொள்கையில் கவரப்பட்டு இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள மு ஹ ம் ம தி ய ர் க ளை அணுகுகின்றனர். இவர்களும் மாற்று மதத்தைச் சேர்ந்தவர்களிடம் முதலில் இஸ்லாத்தின் அடிப்படையான குர் ஆனையும் அதன் அடிப்படையான கலப்பில்லாத ஓரிறைக் கொள்கையையும் மட்டுமே பிரசாரம் செய்வார்கள் ஆயினும் ஓரிறைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு இஸ்லாம் மார்க்கத்தை மேலும் அறிந்து கொள்ள இவர்கள் இஸ்லாமியர்களை அணுகினால் மெதுவாக இணைவைப்பு என்னும் நஞ்சை , (நபி கூறினார் என்று) குர்ஆனில் இல்லாத பல்வேறு செய்திகளைக் கூறி அவர்களுடைய நெஞ்சங்களில் கலந்து விடுவர். பின்னர் அவர் எந்த ஓரிறைக் கொள்கையில் கவரப்பட்டு உள்ளே நுழைந்தாரோ அதன் - மகிமையை மறந்து எப்பொழுதெல்லாம் இறைவனை நினைக்கின்றாரோ அப்போதெல்லாம் முஹம்மத் நபியையும் துதிக்கும் படி செய்து விடுவார்கள் இன்னும் சில இஸ்லாமியர்களை அணுகினால் அவர்கள் அவ்லியாக்களையும் (கடவுளின் நல்லடியார்கள்) நாதாக் களையும் (மகான்கள்) துதிக்கும் படிக்கூறி ஓரிறைக் கொள்கையைத்

தரைமட்டமாக்கி தகர்த்துத் விடுவார்கள்.

மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றால் குர்ஆனின் தெளிவான வசனங்களைப் பார்த்திருக்க வேண்டும் அது கூறுவதே உண்மையான இஸ்லாம். அதை விடுத்து' நமக்கு முன்னர் இஸ்லாம் மார்க்கத்தில் இருப்பவர்கள் நம்மை விட நன்கறிந்திருப்பார்கள் என்றெண்ணி இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி அறிந்து கொள்ள முஹம்மதியர்களின் எந்தப் பிரிவினரையும் அணுகுவது மாபெரும் தவறாகும்! ஏனெனில் உண்மையில் இவர்கள் பின்பற்றுவது இறைவனின் மார்க்கமான அடிபணிதல் என்பதல்ல.

மாறாக குர்ஆனுக்கு முரணான முறையில் முஹம்மதையும் மற்ற இறையடியார்களையும் இறைவனுக்கு இணையானவர்கள் என்றெண்ணி ஒரு நூதனமான முறையில் இணைவைத்து வணங்குவதே அவர்கள் பின்பற்றி வரும் மார்க்கம்.

புதிதாக இஸ்லாம் மார்க்கத்தை அறிந்து கொள்ள விரும்புவர்கள் முஹம்மதியர்களை அணுகினால் ஆரம்பத்தில் குர்ஆனுக்கும் இறை வனுக்கும் முக்கியத்துவம் கொடுத்த வர்கள் புறங்காட்டித் திரும்பி முஹம்மதுக்கும்ஹதீஸ்களுக்கும்அதே அளவு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணலாம் உண்மையில் குர்ஆன் தான் இறைவனிடமிருந்து முஹம்மத் பெற்ற தூதுச் செய்தி. அதுவே ஆதார பூர்வமானதும் நிரூபிக்கப்பட்டதும் ஆகும் ஹதீஸ்களுக்கோ உறுதியான ஆதாரங்கள் எதுவுமில்லை முஹம்மத் நபிக்கும் அவற்றுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை.

ஆயினும் அதன் அடிப்படையில் குர்ஆனுக்கு முரணாக, முஹமதுக்குப் பல்வேறு சிறப்புக்களை அளிப்பார்கள் மற்றத்தூதர்களிடம் இருந்து அவரைப் பிரித்து வேறுபாடு காட்டுவார்கள் அவர்கள் ஓரிறைக் கொள்கை என்ற சத்தியத்தைப் பிரசாரம் செய்து மற்ற மதத்தவர்களைக் கவர்ந்து, பின்னர் அவர்களுக்கு நிதானமாக ஹதீஸ்களைப் பற்றிக் கூறி இணைவைப்பு எனும் படுகுழியில் இழுத்துக் கொள்வர்

மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் ஓரிறைக் கொள்கையில் கவரப்பட்டு இவர்களிடம் வந்து இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொள்ள முற்பட்டால் முதலில் ஒரு வாசகத்தை (லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்

( இதற்கு இவர்கள் கூறும் அர்த்தம் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாரும் இல்லை முஹம்மது இறைவனின் தூதர்

ஆவார்.) மொழிந்தால் அம்மனிதர் இஸ்லாம் என்ற மார்க்கத்தில் இணைந்து விடலாம் என்று கூறி துவக்கத்திலேயே அவர்களைக் குர்ஆனுக்கு முரணான ஒரு செயலைச் செய்ய வைத்து விடுவர். உண்மையில் (சரணடைதல்) இஸ்லாம் என்ற மார்க்கம் எல்லாம் வல்ல இறைவனுடையதாகும் அதில் ஒரு மனிதர் உண்மையில் எப்பொழுது நுழைகிறான், முழுமையாக நுழைந்து விட்டானா. இல்லையா? என்பதை யெல்லாம் அறிந்தவர் அவர் மட்டுமே.

அரபுக்கலாசாரத்தின் அடிப் படையிலான ஒரு சமூகத்தை உருவாக்கி வைத்துக் கொண்டு அதற்கு இஸ்லாம் என்ற பெயரைப் பொய்யாகச் சூட்டி உண்மையான இறைவனின் மார்க்கத்திலிருந்து மக்களைத் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு போலியாக ஒரு சடங்கை நிறைவேற்றி (அரபியில் தான் அவ்வாசகத்தை உச்சரிக்க வேண்டும்) சம்பந்தப்பட்டவர் இஸ்லாம் என்ற மார்க்கத்தில் இணைந்து விட்டார் என்று கூறி உடனடியாக அவர்களுக்கு (போலியான ஒரு (ஹதீஸை) சட்டத்தைக் கூறியோ அல்லது கூறாமலோ) ஒரு தண்டனையை அளிப்பார்கள்! ஆம்! அவர்களுடைய பூர்விகப் பெயர்களை மாற்றிக் கொள்ளும்படி வற்புறுத்துவார்கள். ஒரு இஸ்லாமியப் பெயரைச் சூட்டிக் கொள்ளும்படி நிர்ப்பந்திப்பார்கள் செய்வார்கள்.

உண்மையில் இஸ்லாமியப் பெயர் என்ற ஒன்று இல்லவே இல்லை. ஆனால் முஹம்மதிய முஸ்லீம்கள் பொதுவாக இஸ்லாமியப் பெயர்கள் என்றால் அரபிப் பெயர்களையே எண்ணிக் கொள்வார்கள். அதிலும் முழுமையில்லாத விதமாக ஃபார்ஸியிலும் உருதுவிலும் தமிழிலும் கூட சிற்சில பெயர்களை இஸ்லாமியப் பெயர்கள் என்று அங்கீகரித் திருப்பார்கள். உதாரணமாக ஸல்மான், பெரோஸ் ஷா. அவுரங்கஜீப், நாகூர் கனி. முத்து முஹம்மத் போன்ற பெயர்கள்.

மேலும் நபித் தோழர்கள் இறைவனை நிராகரிக்கும். போது எந்தப்பெயரில் அழைக்கப் பட்டார்களோ அதே பெயரில் தான் தொடர்ந்து அழைக்கப்பட்டார்கள். உண்மையில் அரபியில் தான் பெயர் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குர்ஆனும் கூறவில்லை இவர்கள் இவ்வாறு பின்பற்றும் ஹதீஸ்களும் கூறவில்லை. பின்னர் ஏன் இவர்கள் செய்கிறார்கள்?

அரபி மொழியைச் சிறப்பிப்பதன் மூலம் குர் ஆனைச் சிறப்பிப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் போலும்! உண்மையில் குர்ஆனைச் சிறப்பிப்ப தென்பது அதனை மட்டும் பின்பற்றுவதே ஆகும் என்பதை இவர்கள் அறியவில்லை .

குர்ஆனுக்கு அசலான ஒரு மரியாதையை அளிக்காமல் போலியான ஒரு மரியாதையை அளிக்கின்றார்கள் தொழுகை (ஸலாத்) நோன்பு' (ஸவ்ம்) பள்ளி வாசல் (மஸ்ஜித்) போன்ற சொற்களுக்குத் தாய்மொழியைப் பயன் படுத்தும் இவர்கள். தாய் மொழியில் சூரியன், சந்திரன், மழைமேகம் போன்ற பெயர்களை இஸ்லாமியப் பெயர்கள் என்று அங்கீகரிக்க மாட்டார்கள்.

மாறாக அதே வார்த்தைகளை அரபியில் மாற்றி அதனை அங்கீகரித்துக் கொள்வார்கள் அதாவது
ஷம்ஸ் (சூரியன்)
கமர் (சந்திரன்)
ஜைனுலாபிதீன் (அடியார்க்கு அலங்காரம்)
ஷிஹாப் (மேகம்)

போன்றவை மட்டும் இவர்களிடத்தில் இஸ்லாமியப் பெயர்கள் -) அவற்றில் ஒன்றை புதிதாக நுழைந்தவர்! தேர்ந்தெடுத்துக்கொண்டு பூர்வீகப் பெயரைத் துறந்து விட வேண்டும் பெயரை மாற்றிக் கொள்ள ; வேண்டும் என்று வலியுறுத்துவர் ஏன் இவ்வாறு செய்கின்றனர்? குர்ஆனில் இல்லாத ஒரு விஷயத்தை ஏன் இவர்கள் (ஷரத்) விதிமுறையாக்கி வைத்திருக் கின்றார்கள்? வழக்கம் போலவே அவர்கள் பின்பற்றுவதாகக் கூறும் ஹதீஸ்களே காரணம் (உண்மையில் அவற்றைப் பின்பற்றவே முடியாது) மேலும் எவரும் முழுமையாக அவற்றைப் பின்பற்றவும் இல்லை.

இணை வைத்து வணங்கப்படும் தெய்வங்களின் பெயர்களைச் சூட்டிக் கொண்டிருந்த சில நம்பிக்கையாளர்களின் பெயர்களை முஹம்மத் நபி மாற்றிக் கொள்ளும் படி கூறினார். என்ற கருத்தைக் கூறும் சிற்சில ஹதீஸ்கள், ஹதீஸ் தொகுப்புக்களில் காணப் படுகின்றன. இவையே இவர்களுடைய இத்தகைய போலி நடவடிக்கைகளுக்குக் காரணம் (ஆயினும், முஹம்மத் நபியின் காலத்திலும் ஈஸா (இயேசு) மனிதர்களால் வணங்கப்பட்டார் வழிபடப்பட்டார். அவருடைய பெயரைச் சூட்டிக் கொள்வதைத் தவறு என்று ஹதீஸ்களில் இல்லை இவர்களும் கூறமாட்டார்கள் மேலும் இப்றாஹீம், நூஹ் ஆகிய பெயர்கள் அரபிப் பெயர்களும் அல்ல எனவே அரபியில் தான் பெயர் வைக்க வேண்டும் என்ற

நியதி எதுவும் இல்லை என்பதைப் பாமர முஸ்லிம்கள் உணர வேண்டும். தத்தம் தாய் மொழியில் அழகிய பெயர்களை வைத்துக் கொள்வதை கடவுள் தடைசெய்யவில்லை . அரபியில் பெயர் வைத்துக் கொண்டால் அல்லாஹ் இலகுவில் இவர்களை முஸ்லிம்கள்(!) என்று அடையாளம் கண்டு கொள்வார் என்று எண்ணுகிறார்களோ என்னவோ? அல்லது முஹம்மத் நபி நமக்கு சிபாரிசு (ஷபாஅத்) செய்ய வசதியாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றார்களோ?

புதிதாக இஸ்லாம் மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட மாற்று மத சகோதரர்களை - இஸ்லாமியப் பெயர்களுக்கு மாறிக் கொள்ளும்படி இவர்கள் நிர்பந்திப்பதால் அவர்கள் தத்தம் பெயர்களை மாற்றிக் கொள்ளும் போது அவர்கள் படுகின்ற அல்லல்கள் ஏராளம். ஆயினும் உண்மையில் அவர்களுடைய பூர்வீகப் பெயர் மறைந்து விடுவதில்லை.

அதிகம் படிக்காதவராக இருந்தாலும் ரேஷன் கார்டு. பாஸ்போர்ட் ஆகியவற்றில் பெயரை மாற்ற அரசு அலுவலகங்களுக்கு அலைந்து தங்கள் சக்தியை விரயம் செய்து கொள்கிறார்கள் ஏராளமான (formalities) நடைமுறைகள் அதனால் ஏராளமான தொல்லைகள் மேலும் மனதளவிலும், குடும்பம் மற்ற உறவினர்கள் நண்பர்கள் மத்தியிலும் ஏற்படக் கூடிய இன்னல்களும் உண்டு.

உண்மையில் இஸ்லாமியப் பெயர் என்ற ஒன்றே இல்லை என்பதால், அவர்கள் வீணான ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பெயரை மாற்றிக் கொள்ள முயற்சிக்கும் புதிதாக இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய சகோதரர்கள் அறிந்து கொள்ள வேண்டும் பட்டப்படிப்புக்கு மேல் அரசு அலுவலில் உள்ள படித்த மாற்று மத சகோதரர்கள் பெயர்களை மாற்றிக் கொள்வது மிகச் சிரமம் மிகுந்த ஒரு காரியம் ஆகும்.

அவர்கள் இஸ்லாம் என்பது ஒரு மதம் அல்ல. உண்மையில் இஸ்லாம் என்பது இறைவனை மட்டும் சரணடைதல், (அவரை மட்டுமே) என்பதே ஆகும் என்றறிந்து கொள்ள வேண்டும் பெரும் பான்மையினரின் மனோ இச்சைகளை நாம் பின்பற்றினால் அவர்கள் கடவுளின் பாதையை விட்டு நம்மை தடுத்து விடுவார்கள் என்று குர்ஆன் எச்சரிப்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

✵ ✵ ✵

**Sura 2: The Heifet (Al-Baqarah)**

**அத்தியாயம் - 2 : பசுங்கன்று (அல்பகறா)**

*Abuse of the Scripture: Selective Emphasis and Concealment*

**வேதத்தைத் துஷ்பிரயோகம் செய்தல்**

اَلَّذِيْنَ اٰتَيْنٰهُمُ الْكِتٰبَ يَعْرِفُوْنَهٗ كَمَا يَعْرِفُوْنَ اَبْنَآءَهُمْ
وَاِنَّ فَرِيْقًا مِّنْهُمْ لَيَكْتُمُوْنَ الْحَقَّ وَهُمْ يَعْلَمُوْنَ

146. Those who received the scripture recognize the truth herein, as they recognize their own children. Yet, some of them conceal the truth, knowingly.

146. வேதத்தைப் பெற்றவர்கள் தங்கள் சொந்தக் குழந் தைகளை அவர்கள் அடையாளம் காண்பதைப் போல, இதிலுள்ள சத்தியத்தை அடையாளம் காண்கின்றனர்.ஆயினும், அவர்களில் சிலர் அறிந்து கொண்டே, சத்தியத்தை மறைக்கின்றனர்.

اَلْحَقُّ مِنْ رَّبِّكَ فَلَا تَكُوْنَنَّ مِنَ الْمُمْتَرِيْنَ

147. This is the truth from your Lord; do not harbor any doubt.

147. இதுவே உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாகும்; எவ்விதச் சந்தேகத்தையும் மனதில் தாங்கிக் கொண்டிருக்காதீர்

وَلِكُلٍّ وِّجْهَةٌ هُوَ مُوَلِّيْهَا فَاسْتَبِقُوا الْخَيْرٰتِ اَيْنَ
مَا تَكُوْنُوْا يَاْتِ بِكُمُ اللّٰهُ جَمِيْعًا
اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

148. Each of you chooses the direction to follow; you shall race towards righteousness. Wherever you may be, God will summon you all. God is Omnipotent.

148. நீங்கள் ஒவ்வொருவரும் பின்பற்றுவதற்குரிய திசையைத் தேர்ந்தெடுக்கின்றீர்கள்; நீங்கள் நன்னெறியின் பால் விரைந்திட வேண்டும். நீங்கள் எங்கிருந்த போதிலும், உங்கள் அனைவரையும் கடவுள் ஒன்று திரட் டுவார். கடவுள் சர்வசக்தியுடையவர்.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ وَإِنَّهُ لَلْحَقُّ مِنْ رَّبِّكَ وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ

149. Do you wish to demand of your messenger what was demanded of Moses in the past? Anyone who chooses disbelief, instead of belief, has truly strayed off the right path.

149. நீர் எங்கு சென்றாலும், (ஸலாத்தின் போது) நீர் உம் முடைய முகத்தைப் புனிதப்பள்ளியை* நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும். இதுவே உம்முடைய இரட்சகரிடமிருந்து வந்த சத்தியமாகும். நீங்கள் அனைவரும் செய்கின்ற எந்த ஒன்றைக் குறித்தும் கடவுள் ஒருபோதும் அறியாதவர் அல்லர்.

وَمِنْ حَيْثُ خَرَجْتَ فَوَلِّ وَجْهَكَ شَطْرَ الْمَسْجِدِ الْحَرَامِ وَحَيْثُ مَا كُنْتُمْ فَوَلُّوْا وُجُوْهَكُمْ شَطْرَهٗ ۙ لِئَلَّا يَكُوْنَ لِلنَّاسِ عَلَيْكُمْ حُجَّةٌ اِلَّا الَّذِيْنَ ظَلَمُوْا مِنْهُمْ فَلَا تَخْشَوْهُمْ وَاخْشَوْنِىْ وَلِاُتِمَّ نِعْمَتِىْ عَلَيْكُمْ وَلَعَلَّكُمْ تَهْتَدُوْنَ ۙ

150. Wherever you go, you shall turn your face (during Salat) towards the Sacred Masjid; wherever you might be, you shall turn your faces (during Salat) towards it. Thus, the people will have no argument against you, except the transgressors among them. Do not fear them, and fear Me instead. I will then perfect My blessings upon you, that you may be guided.

150. நீர் எங்கு சென்றாலும், (ஸலாத்தின் போது) உம்முடைய முகத்தை புனிதப்பள்ளியை நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும்; நீங்கள் எங்கிருக்கின்ற போதிலும், (ஸலாத்தின் போது) உங்களுடைய முகங்களை நீங்கள் அதனை நோக்கித் திருப்பிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக, உங்களுக்கெதிராக மக்களுக்கு எந்தத் தர்க்கமும் இருக்காது, அவர்களில் உள்ள வரம்புமீறியவர்களைத் தவிர. அவர்களுக்கு அஞ்சாதீர்கள், பதிலாக எனக்கே அஞ்சுங்கள். அப்போது நான் உங்கள் மீது என்னுடைய ஆசீர்வாதங்களை முழுமைப்படுத்துவேன், நீங்கள் வழிநடத்தப் பட்டவர்களாக இருக்கும் பொருட்டு

كَمَآ اَرْسَلْنَا فِيْكُمْ رَسُوْلًا مِّنْكُمْ يَتْلُوْا عَلَيْكُمْ اٰيٰتِنَا وَيُزَكِّيْكُمْ وَيُعَلِّمُكُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ وَيُعَلِّمُكُمْ مَّا لَمْ تَكُوْنُوْا تَعْلَمُوْنَ ؕ

151. (Blessings) such as the sending of a messenger from among you to recite our revelations to you, purify you, teach you the scripture and wisdom, and to teach you what you never knew.

151.நம்முடைய வெளிப்பாடுகளை உங்களிடம் ஓதிக் காட்டி, உங்களைத் தூய்மைப்படுத்தி, வேதத்தையும் ஞானத்தையும் உங்களுக்குக் கற்றுக் கொடுத்து, மேலும் நீங்கள் ஒருபோதும் அறிந்திராதவற்றை உங்களுக்குக் கற்றுக் கொடுக்க உங்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பியதைப் போன்ற (ஆசீர்வாதங்கள்)

فَاذْكُرُوْنِيْٓ اَذْكُرْكُمْ وَاشْكُرُوْا لِيْ وَلَا تَكْفُرُوْنِ

152. You shall remember Me, that I may remember you, and be thankful to Me; do not be unappreciative.

152.நான் உங்களை நினைவில் கொள்ளும் பொருட்டு, நீங்கள் என்னை நினைவில் கொள்ள வேண்டும், மேலும் என்னிடம் நன்றியோடு இருங்கள்; நன்றி கெட்டவர்களாக இருக்காதீர்கள்.

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ

153. O you who believe, seek help through steadfastness and the Contact Prayers (Salat). God is with those who steadfastly persevere.

153. நம்பிக்கை கொண்டவர்களே உங்களைத்தான், உறுதிப்பாட்டுடனும், (ஸலாத்) தொடர்புத் தொழுகைகளின் மூலமும் உதவி தேடுங்கள். உறுதிப்பாட்டுடன் தொடர்ந்திருப்பவர்களுடன் கடவுள் இருக்கின்றார்.

*Where Do We From Here?*

**இங்கிருந்து நாம் எங்கே செல்கிறோம்**

وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِىْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ  بَلْ اَحْيَآءٌ وَّلٰكِنْ لَّا تَشْعُرُوْنَ

154. Do not say of those who are killed in the cause of God, "They are dead." They are alive at their Lord, but you do not perceive.

154. கடவுள்-ன் நிமித்தம் கொல்லப்பட்டவர்களைக் குறித்து, அவர்கள் இறந்துவிட்டனர், என்று கூறாதீர்கள். அவர்கள் தங்களுடைய இரட்சகரிடம் உயிருடன் இருக்கின்றார்கள், ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَىْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ وَبَشِّرِ الصّٰبِرِيْنَۙ

155. We will surely test you through some fear, hunger, and loss of money, lives, and crops. Give good news to the steadfast.

155. நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு பயம், பசி, மேலும் பணம், வாழ்வு மற்றும் விளைச்சல், ஆகியவற்றின் நஷ்டத்தின் மூலம் சோதிப்போம். உறுதிப்பாடுடைய வர்களுக்கு நற்செய்தி வழங்குவீராக.

# மகளுக்குக் கடிதம்

அன்பு மகள் நூரியாவிற்கு உனது தந்தை பாசத்துடன் எழுதிக் கொள்வது ஸலாமுன் அலைக்கும்.

நீ 1000 மைல்களுக்கு அப்பால் ஹாஸ்டலில் தங்கி படித்துக் கொண்டிருக்கிறாய். உனது கடிதத்தில் - நீ கேட்டிருக்கும் மார்க்க சந்தேகங்களை விளக்கி வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

இஸ்லாத்தின் அடிப்படையான முதல் கடமையான 5 கலிமாவும் ஏன் குர்ஆனில் இல்லை? என்று கேள்வி கேட்டிருக்கிறாய். இறைவன் உதவிகொண்டு குர்ஆன் ஒளியில் கூற முயற்சித்திருக்கிறேன். நிதானமாக படித்து சிந்தனை செய்து பார் மகளே.

நடைமுறையில் நம் முஸ்லீம் சமுதாயம் ஆக்கி வைத்துக் கொண்டிருக்கும் 5 கலிமாவும் குர்ஆனில் இல்லை.

“லா இலாஹ இல்லல்லாஹ்”

என்பது மட்டுமே இறைவன் தான் படைத்த அனைத்து மனிதர்களுக்கும் ஒரே அடிப்படை நம்பிக்கையாக (கலிமாவாக) ஏற்கச் சொன்ன வாசகம். குர் ஆன் இவ்வாறு தான் கூறுகிறது.

அதனுடன் இணைத்து இபுறாஹீம் ரஸுலுல்லாஹ் மூஸா ரஸுலுல்லாஹ். ஈஸா ரஸுலுல்லாஹ். முஹம்மது ரஸுலுல்லாஹ் என்று அந்நந்த நபி சார்ந்த சமூகத்தவர்கள் இணைத்து கலிமா என்று அழைத்துக் கொள்ள மேலும் நம்பிக்கை கொள்ள குர்ஆன் வழிகாட்டவில்லை அது இணைவைப்பு ஆகும் முஹம்மது நபிக்கு முந்திய எந்தச் சமுதாயமும் அத்தகைய செயலை செய்யவில்லை.

இந்த நடைமுறை நபி மரணத்திற்கு பிறகு நபி மீது இட்டுக்கட்டி ஏற்படுத்தப்பட்டதாகும். இதனால் நபிமார்களிடத்தில் வேதம் பாரபட்டும் நிலை குர்ஆன் தடுத்திருந்தும் கூட உண்டாக்கப்பட்டுவிட்டது.

உலகிலுள்ள அனைத்து இந்து, கிறித்தவ, யூத மற்றும் புத்த மக்களை படைத்தது அல்லாஹ் தானே. அவர்கள் ஏன் அல்லாஹ் என்று

அழைக்கவில்லை. லா இலாஹ இல்லல்லாஹ் என்று சொல்வதில்லை. இதன் காரணமாக அவர்களில் நல்ல மனிதர்கள் கூட சொர்க்கம் செல்ல முடியாமல் போய் விடுமே என்று வருந்துவதாக எழுதியிருக்கிறாய்.

மிக நல்ல கேள்வி கேட்டாய் மகளே விவரிக்கிறேன் கேள். அல்லாஹ் என்ற அரபிச் சொல்லுக்கு கடவுள், God பகவான். ஹுதா, படைச்சோன், இப்படித்தான் அர்த்தம். மேலும் லா இலாஹ இல்லல்லாஹ் என்ற அரபு வாக்கியத்திற்கு தமிழ் மற்றும் ஆங்கில அர்த்தம் கொடுத்திருக்கிறேன் கவனித்து பார் மகளே.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| லா | (என்றால்) | - | இல்லை | - | No |
| இலாஹ் | (என்றால்) | - | கடவுள் | - | God |
| இல்லா | (என்றால்) | - | தவிர | - | Except |
| அல்லாஹ் (அல்-இலாஹ்) | (என்றால்) | - | அந்தக் கடவுள் | - | The God |

லா இலாஹ இல்லல்லாஹ்

கடவுள் இல்லை அந்த கடவுளைத் தவிர
No God Except The God

நம்பிக்கை கொண்டவர்களிலும். யூதர்களிலும். கிறித்துவர்களிலும். பிற மதத்தவர்களிலும் எவர்கள் கடவுளின் மீதும், இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டு, நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக அவர்களின் நற்கூலி கடவுளிடம் இருக்கிறது. அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் (அல்குர்ஆ ன் - 2::62, 5:69)

இந்து, கிறித்துவ. யூத, புத்த மக்களிடையே அனேகம் பேர் ஒரு கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற கொள்கையை ஏற்று வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

தாங்கள் செய்கின்ற நல்ல, தீய காரியங்களுக்கு இறந்த பின் கடவுளிடம் பதில் சொல்ல வெண்டும். - வெகுமதியோ, தண்டனையோ கடவுள் கொடுப்பார் என்றும், பலர் நம்புகிறார்கள். அவர்களை எல்லாம்


ஒரு கடவுள் கொள்கையில் ஒன்று திரட்டிட வேண்டும். அவர்கள் தங்களை அறியாமல் எப்படியெல்லாம் கடவுளுக்கு இணைவைப்பு செய்கிறார்கள் என்று அடையாளம் காட்ட வேண்டும்.

ஏகத்துவத்திற்கு குந்தகம் விளைவிக்காத அவர்களது கலாச்சாரம். மொழி, பெயர், இவைகளை நாம் இஸ்லாத்தில் அங்கீகரிக்க வேண்டும், அரபி மட்டுமல்ல அனைத்து மொழிகலும் இறைவன் படைத்ததுதான் என்று புரிந்த மொழிகளும் விளங்கி கடவுள் குர்ஆனில் கூறுகின்ற வெற்றியாளர்களாக இருக்க வேண்டும்.

இப்படிக்கு
உன் அன்புள்ள தந்தை

# இஸ்லாம் குறித்துப் பெரியார்

இஸ்லாம் என்றால் முஹம்மது நபிகள் மதம் என்றோ, இங்கு லுங்கி கட்டிக் கொண்டு, அளந்து தாடி வைத்துக் கொண்டிருக்கும் சாயபு, ராவுத்தர், மரைக்காயர், மாப்பிள்ளை என்கின்றவர்களின் மதம் என்றோ கருதி விடாதீர்கள்.



'இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி போன்ற பொருள்படும் அரபுச் சொல்'. இஸ்லாம் என்பது சகோதரத்தன்மை இவ்வளவுதான். 100, 200 வருடங்களுக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள். அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள், உருவமற்ற கடவுள் வழிபாடு, சாந்தி, ஒற்றுமை பரஸ்பர பணிவு, பக்தி, உடன்பிறப்பு என்ற தன்மைகள் கொண்ட மதம்.

கடவுள் என்பது திராவிட மொழி. காட் (God) என்பது ஆங்கில மொழி, அல்லாஹ் என்பது அரபு மொழி என்பதல்லாமல், திராவிடர்களுக்கு மாறுபட்ட கொள்கை அல்ல'

- சுயமரியாதை இயக்கத்தின் இன இழிவு ஒழிய இஸ்லாமே நன்மருந்து'
என்னும் நூலிலிருந்து, நன்றியுடன், புதிய நினைவூட்டல்

# நயவஞ்சக அரபிகள்

இறுதித் திருவேதம், உலகப் பொதுமறை அல்குர்ஆன் அரபிமொழியில் அருளப்பட்டதாகும். எனவே அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்டவசமாகவோ அதனை முதலில் பெறும் பாக்கியம் பெற்றவர்கள் அரபிகளே. இன்று உலகில் உள்ள முஸ்லீம்கள் தங்களுடைய முன்னோர்கள் அரபியர்களே என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அரபியர்கள் எதனை இஸ்லாம் என்று உலகிற்கு அறிமுகப்படுத்தினார்களோ அதுவே இன்றைய இஸ்லாமாக தொடர்ந்து பரிணமித்துக் கொண்டு வருகின்றது.

இறுதித் திருவேதத்தை இறக்கியருள இறைவன் தேர்ந்தெடுத்த மொழி அரபி அது வளமான வார்த்தைகள் கொண்டது. சட்ட விஷயங்களை விவரிக்க மிகவும் ஏற்றமான மொழியாகவும் உள்ளது. மிகச் சுருக்கமான வார்த்தைகளில் விரிந்த அர்த்தங்கள் தரக் கூடியதாகவும் உள்ளது.

ஆயினும் அதன் உண்மையான சிறப்புக்களை அறிந்து கொள்ளாத இன்றைய பாமர முஸ்லிம்கள் அம்மொழிக்குத் தரும் சிறப்புக்கள் வேறு வகையானது.

அவர்களுக்கு அரபியில் அச்சிடப்பட்ட அனைத்தும் மரியாதைக்குரியது. அது அரபிச் செய்தித்தாளாகக் கூட இருக்கலாம் உண்மையான இஸ்லாத்திற்கு முற்றிலும் முரணாகக் கூட இருக்கலாம். அதைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. மேலும் அவர்களுக்குக் குர்ஆனையும் தெரியாது. எனவே வம்பு எதற்கு என்று அவர்கள் அரபியில் அச்சிடப்பட்ட அனைத்திற்கும் குர்ஆனுக்குரிய மரியாதையைத் (அதுவும் போலியான மரியாதைதான்!) தந்து விடுவர்.

அத்துடன் ஒருவர் அரபி மொழியை அறிந்திருக்கிறார் என்றால் அவரும் இவர்களிடம் தனிச் சிறப்பைப் பெற்று விடுவார். ஒருவர் அரபியில் நாலு வார்த்தைகள் கூறி விட்டுப் பின்னர் அவர் என்ன கூறினாலும் அவை அனைத்தும் குர்ஆனில் உள்ளவையே என்று அவர்கள் எண்ணிக் கொள்வர். அவரைக் குருட்டுத் தனமாகப் பின்பற்றுவர். அரபி மொழியை அறிந்தவர்களை மட்டுமே அறிஞர்கள் என்று ஏற்றுக் கொள்வர் (ஆனால் பெரும்பான்மையான ஆலிம்கள் அரபிமொழியில் உரையாடும் அளவுக்கு அதனை அறிந்து இருக்க மாட்டார்கள்.

சிலர் மட்டுமே அரபியை அறிந்திருப்பர். அதுவும் ஓட்டை அரபியாகத்தான் இருக்கும்)

முஸ்லிம்களின் இத்தகைய நடவடிக்கைகளுக்குக் காரணம் குர்ஆனை உண்மையில் அவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதே. குர்ஆனின் அடிப்படையையேனும் இவர்கள் அறிந்திருப்பார்களானால் இவ்வாறு நடந்து கொள்ள மாட்டார்கள்.

மேலும் அன்றைய அரபிகள் குர்ஆனுடன் சேர்த்துக் கொடுத்த, ஒரு நூலகம் கொள்ளுமளவுக்குள்ள நூல்களையும் முஸ்லிம்கள் தத்தெடுத்துக் கொண்டனர். குர்ஆனுக்கிணையான அதே மரியாதையை அரபியில் எழுதப்பட்ட அன்றைய அறிவுக்குப்பைகளுக்கு இன்றும் தந்து கொண்டிருக்கின்றனர்.

அன்று முஹம்மத் நபியின் தோழர்களாக இருந்த அரபியர்களையே' தங்களுடைய முன்னோர்களாகப் பெருமிதத்துடன் கருதிக் கொள்கின்றனர்.

ஆனால் அந்த அரபியர்கள் இஸ்லாம்' என்றால் இறைவனுக்கு மட்டுமே அடிபணிதல் என்பதை இந்த உலகுக்குச் சொல்லவே இல்லை. மாறாக இறைவனுக்கு எவரையும் இணையாக்கக் கூடாது என்ற தூதுச் செய்தியை எத்தி வைத்த அந்த முஹம்மதையே இறைவனுக்கு இணைவைத்து, இறைவன் அளவுக்கு, ஏன் அவரை விட கருணை உள்ளவராக முஹம்மத் நபியை உலகுக்குப் பொய்யாக அறிமுகம் செய்தனர். (இறைவனை விடவும் கருணை உள்ளவராக முஹம்மத் நபியை முஸ்லிம்கள் கருதுகின்றார்கள் என்பதற்கு இறைவனின் தண்டனையிலிருந்து. நரகத்திலிருந்து முஹம்மத் நபியின் பரிந்துரை (ஷஃபாத்) மூலம் தப்பித்து விடலாம் என்ற அவர்களுடைய நம்பிக்கையே சாட்சி)

மேலும் ரஷாத் கலீஃபாவின் காலம் வரை அதாவது 1400 வருடங்களுக்கும் மேலாக ஒரு அரபியர் கூட குர்ஆனை மற்றொரு மொழியில் மொழிபெயர்த்து அம்மொழி பேசும் சமுதாயத்தினருக்கு உதவுவோம் என முன்வரவில்லை.

அப்படி மொழி பெயர்க்கப்பட்ட குர்ஆன் மொழி பெயர்பையும் கூட (ரஷாதின் ஆங்கில மொழி பெயர்ப்பு) மொத்தமாக வாங்கி எரித்தது சவூதி அரசாங்கம்

மேலும் இன்று முஸ்லிம்களிடத்தில் சத்தியம் எத்தி வைக்கப்படும் போது அவர்கள் மக்காவில் கூட இப்படித்தானே இருக்கின்றது நீங்கள் அதனை மாற்ற முடியுமா' என்று கேட்கின்றனர்.

அவர்கள் ஒன்றை நன்கு நினைவு படுத்திப் பார்க்க வேண்டும். அந்த அரபியர்களும், அதே மக்காவாசிகளும்தான் புனிதப் காபத்துல்லாவை சிலைகளைக் கொண்டு நிரப்பி வழிப்பட்டும். கைதட்டி, விசிலடித்து வணக்கங்களை செய்து இறைவணக்கத்தை களங்கப்படுத்தி வந்துள்ளனர் என்று குர்ஆன் கூறுகிறது. அதுதான் உண்மையான இறை வணக்கம் என்று அக்கால மக்கள் நம்பி பின்பற்றி இருப்பார்கள்தானே. அதேபோல் இன்று

மக்காவில் உள்ளதுதான் உண்மையான இஸ்லாம் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். குர்ஆனை தங்களுடைய தாய்மொழியில் கொண்டிருப்பதால் அரபிகள். அனைவரும் பாக்கியம் பெற்றவர்கள் என்றும் இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

குர்ஆனை வாரிசாகப் பெற்ற முஸ்லிம் சமுதாயம் இந்த நிலையில் இருக்க, குர்ஆனில் கடவுள் அரபியர்களைப் பற்றி என்ன கூறுகிறார் என்று பார்த்தால் நமக்கு அதிர்ச்சியே ஏற்படும். 9வது சூராவில் (எந்த அத்தியாயத்தை அரபியர்கள் சிதைத்து வைத்திருக்கின்றார்களோ அந்த அத்தியாயத்தில்) அரபியர்களைப் பற்றி கடவுள் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

9:97

அரபியர்கள் நிராகரிப்பிலும், நயவஞ்சகத்திலும் மிகவும் மோசமானவர்கள். மேலும் கடவுள் தன்னுடைய தூதருக்கு வெளிப்படுத்திய சட்டங்களைப் புறக்கணிக்கக் கூடியவர்களாகவும் உள்ளனர். இறைவன் எல்லாம் அறிந்தவர்
ஞானம் மிக்கவர்'

(9:99, 102) சிற்சில நல்ல அரபியர்கள் இருந்தாலும் பெரும்பான்மையான அரபிகளின் தன்மையைப் பற்றி இவ்வசனத்தில் இறைவன் கூறுகிறார். அக்காலத்தில் வாழ்ந்த அரபியர்களைத்தான் இது குறிக்கும் என்று தவறாக எண்ணிவிடாதீர்கள். இறை வசனங்கள் எக்காலத்திற்கும் பொருந்தும் என்பதை நம்புங்கள்.

இன்றைய முஸ்லிம்கள் அன்று பெரும்பான்மையான அரபிகள் எதனை மார்க்கம் என்று கூறினார்களோ அதனையே பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.. நபியை ஒருமுறை பார்த்தவரானால் அவரும் நபித்தோழரே, அவர் கூறியவற்றை அல்லது கூறியதாகக்

கூறப்படுபவற்றையும் கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மிகத் தீய வழியை ஹதீஸ்கள் அவர்களுக்குக் காட்டிக் கொண்டிருப்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் 9:101 ல் கடவுள் கூறுகின்றார்.

உங்களைச் சூழ்ந்துள்ள அரபியர்களில் நயவஞ்சகர்கள் இருக்கின்றனர். மேலும் (மதீனாவில்) நகரத்தில் வாழ்ந்து கொண்டிருப்போரில் நயவஞ்சகத்திற்குப் பழகி விட்டவர்களும் இருக்கின்றார்கள். உங்களுக்கு அவர்களைத் தெரியாது. ஆனால் நாம் அவர்களை அறிவோம். நாம் அவர்களுக்கு வேதனையை இரு மடங்காக்குவோம். பின்னர் அவர்கள் கடுமையான வேதனையை அடைந்தவர்கள் ஆவார்கள்.

முஹம்மத் நபியின் வாழ்வில் அவர் அடைந்த வெற்றிகளையும். அவருடைய இறுதிக் காலத்தில் அரபியர்கள் கூட்டங்கூட்டமாக வந்து அவருடைய மார்க்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள் என்பதையும் குர்ஆன் விவரிக்கின்றது. வழக்க போலவே சரித்திரமும் அதற்குச் சான்றாக இருக்கின்றன்து. அவ்வாறு வந்து சேர்ந்த அரபியர்களில் பெரும்பான்மையானோர் தந்ததே இன்றைய இஸ்லாமாக நிலவி வருகின்றது. அவர்களைப் பற்றிய தூதரின் சாட்சியத்தை இறைவன் நமக்குக் குர்ஆனில் அறிவிக்கின்றார்.

25:27 முதல் 30 வரை மறுமையின் நிகழ்வுகளை முன்னறிவிக்கும் இறைவன் 25:30 தூதரின் சாட்சியத்தைப் பதிவு செய்கிறார்.

'தூதர் கூறினார், என் இரட்சக்ரே. என் சமூகத்தார் இந்தக் குர்ஆனைப் புறக்கணித்து விட்டார்கள்' (மேலும் பார்க்க 25:31)

அவ்வாறு குர் ஆனைப் புறக்கணித்து விட்ட. அவர்கள் நபியின் நாற்பெருந்தோழர்களில் மூவரை, உமர், உஸ்மான், அலீ ஆகியோரைத் திட்டமிட்டுக் கொலை செய்தனர். அத்துடன் நில்லாமல் நபியின் பேரர்களும் அலீயின் மகன்களுமாகிய ஹஸன் ஹீஸைன் ஆகியோரையும் கொலை செய்து ஒழித்தனர். சத்தியத்தை மறைப்பதற்காகவே அன்றி வேறு எதற்காக நம்பிக்கையற்றோர் இத்தகைய பிரயத்தனப்பட்டிருக்க முடியும்? அந்த நல்லடியார்கள் உயிரைத்தியாகம் செய்தது சத்தியத்தை நிலைநாட்டுவதற்காவா? அல்லது வெறும் அரசியல் காரணங்களுக்காக மட்டும்தானோ? நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் நபியின் காலத்தில் வாழ்ந்த அரபியர்கள் பெரும்பாலோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகக் கூறிவிட்டு இறைவனின் பாதையில் பாடுபடத் தயங்கிய நயவஞ்சகர்களாக இருந்தனர் என்று இறைவன் கூறுவதை 9:90, 120. 48:11, 16 ஆகிய வசனங்களில் நாம் காணலாம். மேலும் நயவஞ்சகர்களைப் பற்றி விவரிக்கும் ஏராளமான வசனங்களும் அரபியர்களின் குணக்கேடுகளை விவரிக்கின்றது. அரபிகளில் பெரும்பாலோனோர் நயவஞ்சகர்களில் முதன்மையானவர்கள் என்று இறைவன் கூறுகிறார் அல்லவா? படித்துப் படிப்பினை பெறுவோம்.

பாமர முஸ்லிம்கள் மார்க்கத்திற்கு விதிமுறைகள் (ஷரத்) கூறும். (Authority) அதிகாரம் இறைவனைத் தவிர (மக்காவில் வாழும் அரபியர்களுக்கும் இல்லை, நபித்தோழர்களுக்கும். இல்லை முஹம்மத் நபிக்கும் இல்லை) வேறு எவருக்கும் இல்லை என்று குர்ஆனில் இறைவன் தெளிவாக அறிவிக்கின்றார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சிறப்புக்கள் அனைத்தும், இறைவனுக்கும். அவருடைய வார்த்தைகளுக்கும் மட்டுமே அன்றி முஹம்மத் நபிக்கோ அரபி மொழிக்கோ இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உங்கள் அறிவைக் கொண்டு சிந்தனை செய்து பாருங்கள். கண், காது அறிவு கொடுக்கப்பட்டிருப்பதற்காக மனிதன் அதைக் கொண்டு சிந்தித்துப் பார்த்தாயா? என்று மறுமையில் இறைவனால் கேள்வி கேட்கப்படுவான் என்று குர்ஆ ன் கூறுகிறது. (17 : 36)

யாரேனும் ஒரு விஷயத்தை முன்வைத்தால் அவர் மௌலவியா? எத்தகையவர்? அதுபற்றி வேலூரில், டில்லியில் என்ன சொல்கிறார்கள். மக்காவில் என்ன சொல்கிறார்கள் என்று கேட்காதீர்கள். முதலில் இறைவன் குர்ஆனில் என்ன சொல்கிறார் என்று பாருங்கள். அறிவுகொண்டு சிந்தியுங்கள்.

அரபியர்கள் மார்க்கத்தில் எந்த அளவுக்கு பற்றுதலும் பிடிப்பும் கொண்டிருந்தால் இறைவன் அவர்களுக்கு மாபெரும் செல்வமான பெட்ரோல் ஊற்றையும், (தங்கச் சுரங்கத்தையும்) கொடுத்திருப்பான் என்று அரபியர்களைப் பற்றி நம்மவர்கள் கூறுகின்றனர். அதனாலும் அரபியில் உள்ள அனைத்து புத்தகங்களையும், அரபுக்களையும் முன்னோடிகளாகக் கொள்கின்றனர்.

> மேலும் அன்றைய அரபிகள் குர்ஆனுடன் சேர்த்துக் கொடுத்த, ஒரு நூலகம் கொள்ளுமளவுக்குள்ள நூல்களையும் முஸ்லிம்கள் தத்தெடுத்துக் கொண்டனர். குர்ஆனுக்கிணையான அதே மரியாதையை அரபியில் எழுதப்பட்ட அன்றைய அறிவுக்குப்பைகளுக்கு இன்றும் தந்து கொண்டிருக்கின்றனர்.

அல்லாஹ்வின் மீது பொய்களைக் கூறி, மார்க்கத்திற்கு புறம்பாகவும் , அத்துமீறி நடப்பவர்களுக்கு அவர்கள் விரும்பும் உலக ஆதாயத்திலும், செல்வத்திலும் மிகைக்கச் செய்து தட்டழிந்து போகும்படி விட்டுவிடுவோம் என்று இறைவன் கூறுவது இவர்களுக்குத்தான் என்பதை உணருங்கள்.


தமிழ் மொழியில் குர்ஆன் வெளிவந்துவிட்டதால், அனைத்து தமிழ் முஸ்லிம்களும் அனைத்து தமிழ் மக்களும் குர்ஆனை தமிழில் ஒருமுறையேனும் படித்து பார்த்து விட்டார்களா?

இது போலத்தான் அனைத்து அரபுக்களும் (சிலரைத் தவிர்த்து) குர்ஆனைப் படித்து பார்க்காமல் கூட இருக்கலாம் அல்லவா.?

அறிவியல், மருத்துவம் போன்ற சில உலகக் காரியங்களில் வெள்ளைக்காரன் சொன்னால் சரியாக இருக்கும் என்று எண்ணுவதைப் போல.

இஸ்லாத்தில் அரபுக்கள் சொன்னால், அரபியில் இருந்தால் சரியாகத்தான் இருக்கும் என்று ஏற்காதீர்கள். குர்ஆன் கூறுவது மட்டும்தான் சரியாக இருக்கும்.

அரபிகள் அத்தனை பேரும் முஸ்லீம்கள். அனைவரும் ஈமான கொண்டு விட்டார்கள் என்றும், இனி ஈமான் கொள்ள வேண்டியது அவர்களைத் தவிர பிறமொழிக்காரர்களும், பிற சமுதாயத்தவரும் தான் என்று தவறாக எண்ணி விடாதீர்கள். இன்றைக்கும் அரபிக்களில் முஸ்லீம்கள் தவிர காபீர்கள். முனாபிக்குகள் மற்றும் நாத்திகர்கள் இருக்கிறார்கள் என்பதை உணருங்கள். அரபியர்கள் மீதும் அரபி கற்ற ஆலிம்கள் மீதும் நம்பிக்கை வைக்காதீர்கள். எல்லாம் வல்ல இறைவன் மீது மட்டும் நம்பிக்கை கொள்ளுங்கள்.

# நேருக்கு  நேர்

தவ்கீது ஆலிம் : அஸ்ஸலாமு அலைக்கும் மன்சூர்!

மன்சூர் : ஸலாமுன் அலைக்கும். வாங்க. ஆலிம் வாங்க. முன்னர் அடிக்கடி தவ்ஹீது கூட்டங்களில் சந்தித்துக் கொள்வோம். அப்பொழுதெல்லாம் உங்களது மேடைப் பேச்சுக்களில் கவரப்பட்டு லயித்துப் போய் நின்றிருக்கிறேன்.

தவ்ஹீது ஆலிம் : எனக்கும் நன்கு ஞாபகம் இருக்கிறது. அறிவுப்பூர்வமான பல கேள்விகளைக் கேட்டு திணறடித்திருக்கிறீர். ஆனால் கடைசியில் குர்ஆன் மட்டும் போதுமானது என்று இப்படி வழிகேட்டில் சென்று காஃபிர்களாகி விட்டீர்களே?.. பழகிய தோஷத்திற்காக நறுக்கென்று நாக்கைப் பிடுங்குகிற மாதிரி நாலு கேள்வி கேட்டுவிட்டுப் போகத்தான் வந்தேன்.

மன்சூர் : கற்றறிந்த ஆலிம் நீங்கள். திட்டுங்கள் பரவாயில்லை... என்னுடைய பல கேள்விகள் அறிவுப்பூர்வமானதாக இருந்தது என்ற உங்கள் பாராட்டுக்கு நன்றி... அல்ஹம்துலில்லாஹ்.

சரி... நறுக்கென்று நாலு கேள்வி என்பது கேவலப்படும் வகையில் திட்டுவது என்பதைத்தான் குறிக்கும்.

அதற்கு முன்னர் உண்மையில் நான் அறிவுப்பூர்வமான சில கேள்விகள் தங்களைக் கேட்க அனுமதிக்க முடியுமா? குர்ஆனைக் கொண்டு மட்டும் அழகிய முறையில் தர்க்கம் செய்ய சம்மதமா?

தவ்ஹீது ஆலிம் : மார்க்கம் - பற்றி - தர்க்கம் செய்ய நான் என்றுமே பின்வாங்கியதில்லை... சம்மதம்.

மன்சூர் : அஸ்ஸலாமு அலைக்கும் என்று குர்ஆனில் எங்குமே இல்லை. ஸலாமுன் அலைக்கும் என்று குர்ஆனில் (6:54) உள்ளது போல் கூறுவதை தாங்களைப் போன்ற பலர் பரிகாசம் செய்வது ஏன்?

தவ்ஹீது ஆலிம் : உலகில் பெரும்பாலான மக்கள் காலம்காலமாக கூறிவருவது அஸ்ஸலாமு அலைக்கும் என்பதுதான்.

நீங்கள் கூறுவது புது மாதிரி என்பதால் கேலியாக பார்க்கிறார்கள்... இது சின்ன விஷயம்தான். அடுத்ததென்ன?

<u>மன்சூர் :</u> அல்லாஹ் சொல்லித்தரும் வார்த்தை கேலிக்குரியதா? சரி... இருக்கட்டும்....

மரணித்தவர்கள் கேட்க மாட்டார்கள். பார்க்க மாட்டார்கள். எனவே முகம்மது நபிக்கு கூறப்படும் ஸலாம்கள். மலக்குகள் மூலம் கொண்டு செல்லப்பட்டு நபிக்கு கூறப்படும் என்கிறீர்களே..

வினாடிக்கு வினாடி உலகம் முழுவதும் கோடிக்கணக்கானோர் கூறும் ஸலாம்கள்' மலக்குகளால் கூறப்பட்டு, அதை ' ஒரு சேரக் கேட்கவும். பதிலளிக்கவும் முடிகின்ற செவிப்புலன் அவருக்கு மட்டும் இருக்குமா என்று சிந்தித்தீர்களா? இறைவனால் மட்டுமே அனைவரையும் செவியேற்க முடியும் என்கிறது குர்ஆன். இறைத்தன்மையை நபிக்கு கொடுக்கிறீர்களா?

<u>தவ்ஹீது ஆலிம் :</u> இறைவன் நாடினால் முடியும். இறைவனின் வல்லமையில் நம்பிக்கையில்லையா உங்களுக்கு?

<u>மன்சூர் :</u> இறைவனின் சொல்தானே குர்ஆன். இறைவன் அவ்வாறு குர்ஆனில் கூறவில்லையே:

1. நபியே நீர் விரும்பிய வர்களையெல்லாம் செவியேற்கச் செய்யமுடியாது. நேர்வழிகாட்ட முடியாது என்றும். (28:56)

2. அவர் உங்களைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை (15:llO)

3. உங்களைப் போன்று உணவு உண்ணக் கூடியவராகவும் கடைத்தெருவில் நடமாடக் கூடியவராகவும் இருக்கிறார் என்றும் (25:20)

4. மறுமையில் எனக்கு என்ன செய்யப்படும். உங்களுக்கு என்ன செய்யப்படும் என்பதை நான் அறியமாட்டேன் என்றும்

5. நிராகரிக்கக் கூடியவர்களுக்கு கண்காணிப்பாளராக நாம் உம்மை அனுப்பவில்லை என்றும் (6:107)

இன்னும் இது போன்ற ஏராளமான வசனங்கள் நபி நம்மைப் போன்ற மனிதர் என்றும், தெய்வீகத் தன்மை உடையவர் இல்லை என்றெல்லாம் எங்களைப் போன்றவர்களுக்குத் தாங்கள் பயான் செய்ததை நான் இன்னும் மறந்து விடவில்லை .

<u>தவ்ஹீது ஆலிம் :</u> ஒரு ஆலிமுக்கே உபதேசம். செய்கிறீரே! நீர் கூறுவது அனைத்தும் இம்மையில். ஆனால் மறுமையில் அனைவரைக் காட்டிலும் சிறப்பான பதவியில் உயர்ந்த அந்தஸ்த்தில் நபி இருப்பார்! தன் உம்மத்துக்களுக்காக இறைவனிடம்

பரிந்துரைப்பார்! மன்றாடி பாவ மன்னிப்பு கேட்பார்!

மன்சூர் : அல்லாஹ் மீது பொய் கூறுவதற்கு அஞ்சுங்கள். முஹம்மது நபி மறுமையில் உயர்ந்த பதவியில் இருப்பார் என்று குர்ஆனில் இல்லை. அனைவரைக் காட்டிலும் சிறப்பான அந்தஸ்த்தில் இருப்பார் என்றும் இல்லை . மேலும் மறுமையில் உம்மத்துக்காக பரிந்துரைப்பார். பாவ மன்னிப்பு கேட்பார் என்றும் இல்லை. இறைவன் - குர் ஆனில் கூறாத இவ்விஷயங்கள் ஏற்புடையதா? நபிமார்களுக்கிடையில் ஈசா சிறந்தவர். மூஸா சிறந்தவர் முகம்மது சிறந்தவர் என்று பேதம் பாராட்டக்கூடாது என்று குர் ஆனில் உள்ளதே.

எந்தவித பரிந்துரையோ, பகரமோ இல்லாத அந்த நாளில்' என்ற வசனம் தாங்கள் பயான் செய்து வலியுறுத்தி சொன்னதுதானே! குர்ஆன் பொய் கூறுமா?

**(மன்சூரின் தெளிவான கேள்விகளால் தாக்கப்பட்டு, ஆலிமின் இதயம் கனத்தது. நபிமார்களுக்கிடையில் நாம் வேறுபாடு காட்டுகிறோமா உச்சி முதல் உள்ளங்கால் வரை நரகத்தின் நெருப்பு தன்னை சுட்டெரிப்பது போல் உணர்ந்து நெளிந்தார். சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.**

**ஆலிம் ஒரு முடிவுக்கு வந்தார். தனக்குள்ளே இருந்த ஆலிம் என்ற பெருமையை. கர்வத்தை வீசியெறிந்தார். தான் சொர்க்கவாசி என்றும் பிறத்தியாரை காஃபிர்கள் என்றும் கொண்டிருந்த நம்பிக்கையை விட்டொழித்தார். நிதானமாக, மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார். அச்சத்தால் அவர் உடலில் லேசான நடுக்கம் ஏற்பட்டது)**

<u>தவ்ஹீது ஆலிம் :</u> கண்ணியக் குறைவாக நான் பேசியிருந்தால் முதலில் மன்னியுங்கள். உங்களது கருத்துக்களை நான் சிந்தித்துப் பார்க்கிறேன். இப்பொழுது சில கேள்விகளுக்கு பதில் சொல்லுங்கள்.

<u>தவ்ஹீது ஆலிம் :</u> நீங்கள் ஏன் முகம்மது நபியை மட்டந் தட்டுவதிலேயே இருக்கிறீர்கள்.?

<u>மன்சூர் :</u> உங்கள் கேள்வி மிகமிகத் தவறானது. மனிதர் என்று இறைவன் பல முறை வலியுறுத்திக் கூறியும் விடாப்பிடியாக நீங்கள் இல்லாதவற்றை இருப்பது போல் உயர்த்திக் காட்டாதீர்கள் என்று தாழ்மையாக நினைவு படுத்துகிறோம். மற்றபடி நற்குணங்கள் நிறைந்த நபியை ஒரு போதும் மட்டந்தட்டவில்லை,

மனிதர் என்றால் உணவு உண்பார். மல, ஜலம் கழிப்பார். தூங்குவார்.

மனைவியுடன் இருப்பார், சிரிப்பார். துக்கத்தில் அழுவார். சிற்சில மனிதத் தவறுகளை செய்வார். கண்டிக்கப்படுவார். திருத்திக் கொள்வார். இவையெல்லாம் செய்பவர் மனிதரே அன்றி வேறில்லை என்று தானே அர்த்தம் ஆலிம் அவர்களே, பின் ஏன் நபிக்கு தெய்வீகத் தன்மை? ஸலவாத்து என்னும் துதி ஏன்? துதிப்பதற்கு உரியவர் இறைவன் மட்டும்தானே? சிந்தியுங்கள்.

<u>தவ்ஹீது ஆலிம் :</u> அகில உலகங்களுக்கும் அருட் கொடையாக நபியை அல்லாஹ் அனுப்பி இருக்கிறான். இது சிறப்பில்லையா?

<u>மன்சூர் :</u> முஹம்மது என்ற மனிதர் அருட்கொடையாக மாட்டார்: தூதுத்துவத்தை கொடுத்து நபியை அனுப்பியது அல்லாஹ்வின் அருட்கொடையான செயல் ஆகும் என்பதே சரியான அர்த்தம். பொறுமையாக கேளுங்கள்.

அனைத்து மனிதர்களுக்கும் முஹம்மதை அனுப்பியது நம்முடைய அருட்கொடையே ஆகும். (வசனம் 21:107) என்பதுதான் சரியான தமிழாக்கம். நேர்வழியறியாத அவருக்கு நேர்வழிகாட்டி, தேவையிலிருந்த அவரை தேவையற்றவராக்கி நற்குணங்களை அவருக்கு அருளி மக்களிடையே இருந்து அவரைத் தேர்வு செய்து தூதரர்க்கி வேதத்தை அவர் மூலம் வெளிப்படுத்தி நபியாக்கியது, அல்லாஹ் மனித இனத்துக்கு செய்த மாபெரும் அருட்கொடை.

தவ்கீது ஆலிம் : இறுதி நபி என்பது சிறப்பில்லையா? விண்ணுலகப் பயணம் சென்று வந்தது சிறப்பில்லையா?

மன்சூர் : சிறப்பு என்பது உண்மைதான். ஆனால் நபிமார்களில் அனைவரையும் விட சிறந்தவர் என்பதுதான் தவறாகும்.

நபிமார்களில் சிலரைச்
சிலரைவிட நாம் சிறப்பாக்கி
வைத்திருக்கிறோம் (17:55)

1. ஆதம் : முதல் மனிதர் என்பதாலும் தாயும், தந்தையும் இன்றி பிறந்தவர், மனித குலத்துக்கே தந்தை என்பதாலும் ஒரு வகையில் சிறப்பே.

2. மூஸா : இறைவனுடன் பேசியவர். மந்திரங்களை அற்புதமாக பெற்றவர் என்பதால் ஒரு வகையில் சிறப்பே.

3. இபுறாஹிம் : பெரும் நெருப்புக் குண்டத்திலிருந்து பாதிப்பின்றி மீண்டவர். இறைவனுக்கு நேசர் என்பதாலும் ஒருவகையில் சிறப்பே.

4. ஈஸா : இறைவன் அருள் கொண்டு மரணித்தவருக்கு உயிர்கொடுத்தார். பிறவிக் குருடருக்கு கண் கொடுத்தார் என்பதால் ஒருவகையில் சிறப்பே.

5. சுலைமான் : பறவை, எறும்புகளின் பாஷை அறிந்தவர். ஜின் என்னும் பூத வர்க்கங்களை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் என்பதும் ஒரு வகையில் சிறப்பே.

6. முஹம்மது : குர்ஆனைத் தவிர எந்த வித அற்புதமும் இன்றி தூதுத்துவத்தை நிறைவு செய்தார் ' என்பது ஒரு வகையில் சிறப்பே.

இவர்களில் ஒருவர் போல் மற்றவர்கள் இல்லை. முஹம்மதை விட ஈஸா சிறந்தவரா? அவரைவிட இபுறாஹிம் சிறந்தவரா? அவரைவிட மூஸா. அவரையும்விட நூஹ். ஆதம் சிறந்தவர்கள் என்பதா? என்ன ஒரு பேதமை?

ஒவ்வொருவருக்கும் ஒரு வகையான சிறப்பை இறைவன் கொடுத்திருந்தார். என்பதுதான் கருத்தாகும்.

<u>தவ்ஹீத் ஆலிம் :</u> இறுதி வேதத்தை பெற்றுத் தந்தது சிறப்பில்லையா?

மன்சூர் : இவ்வாறு கூறுவது மாபெரும் தவறாகும். இறைவன் நாடியோரை தேர்வு செய்து தூதராக்குகிறார். வேதத்தை கொடுத்து மக்களிடையே பிரகடனப்படுத்தச் செய்கிறார். விளக்கி வைக்கிறார். இறைவன் நாடியிருந்தால் முஹம்மதுவிற்கு பதிலாக வேறு ஒரு மனிதரை தூதராக்கி இருப்பார் இறைவன் அனைத்திற்கும் வல்லமை பெற்றவர் அல்லவா?

மனிதர்களுக்கு நல்வழி காட்ட வேண்டி இறைவன் நம்மிடையே வாழ்ந்த முகம்மது என்னும் ஒரு மனிதரை தேர்வு செய்து நற்குணங்களை கொடுத்து. வேதத்தையும் அதில் பொதிந்துள்ள ஞானத்தையும் கற்றுக் கொடுத்து நபியாக்கி வாழ்ந்து மறையச் செய்விக்கிறார். இறைவன் குர்ஆனை அவரே அருள் செய்கிறார் என்பதுதான் சரியாகும்.

<u>தவ்ஹீத் ஆலிம் :</u> கருத்துக்கள் அனைத்தும் சிந்திக்கத் தக்கவைதான். சிந்திக்கிறேன். வேறு ஒரு கேள்வி. சுருக்கமாக பதில் கூறும்.

இவ்வளவு அழகிய முறையில் விளங்கி வைத்திருக்கக் கூடிய நீங்கள் ரஷாத் கலிஃபா என்ற ஒரு மனிதரை தூதர் என்று சொல்வதும் 19 என்னும் கணித அமைப்பும் பைத்தியக் காரத்தனமாகவும். பரிகசிக்கும்படியும் உள்ளதே. இஸ்லாத்திற்கும். வாழ்க்கைக்கும் இவைகளின் தேவையென்ன?

<u>மன்சூர் :</u> சுருக்கமாகக் கூறினால் இறைவன் குர்ஆனில் முஹம்மது நபியை தன் வாயால் ஒரு தூதர் வர இருக்கிறார் என்று (72:24:30) கூறச் செய்கிறார். மேலும் தூதர்களுக்கான இலக்கணம். தகுதிகள் பற்றியும் குர்ஆன் கூறுகிறது. ரஷாத் கலிஃபா தூதர்தானா? என்று நீங்களே ஆய்வு செய்து பார்த்துக் கொள்ளுங்கள்.

அல்லாஹ்
மீது பொய்
கூ று வ த ற் கு
அஞ்சுங்கள். முஹம்மது
நபி மறுமையில் உயர்ந்த
பதவியில் இருப்பார் என்று
குர்ஆனில் இல்லை .
அனைவரைக் காட்டிலும்
சிறப்பான் அந்தஸ்த்தில்
இருப்பார் என்றும் இல்லை.
மேலும் மறுமையில்
உம்மத்துக்காக பரிந்துரைப்பார்,
பாவ மன்னிப்பு கேட்பார் என்றும்
இல்லை. இறைவன் குர்ஆனில்
கூறாத இவ்விஷயங்கள்
ஏற்புடையதா? நபிமார்களுக்
கிடையில் ஈசா சிறந்தவர்,
மூஸா சிறந்தவர் முகம்மது
சிறந்தவர் என்று பேதம்
பாராட்டக்கூடாது என்று
குர்ஆனில் உள்ளதே.

ரஷாத் கலிஃபர் சொல்லிச் சென்ற ஒரே செய்தி 'குர்ஆன் மட்டும்தான் மார்க்கம்' என்பதுதான்.

குர்ஆனை மட்டும் பின் பற்றும் ஒருவருக்கு ரஷாத் ஒரு தூண்டுகோலே தவிர வேறு இல்லை. துதிபாடத் தேவையுமில்லை.

19 என்னும் கணித அற்புதம் 74:30ல் இறைவன் கூறுவதுதான். முஹம்மது நபி நமக்கு விளக்கம் கொடுத்து செல்லாத அலிப், லாம், மீம் போன்ற முத்திரை எழுத்துக்களுக்கு விளக்கம் கூறும் அற்புதம். மொத்த குர்ஆனும் 19-ல் கட்டமைக்கப்பட்ட கம்ப்யூட்டர் கால இறை அற்புதம்.

இதைக் கொண்டு குர்ஆனை உலகுக்கு மெய்ப்படுத்தலாம். எவராலும் ஒரு அத்தியாயத்தைக் கூட இயற்ற முடியாது என்ற இறைவனின் சவால் இந்த 74:30-ல் உள்ள 19 என்னும் அற்புதத்தைக் கொண்டுதான்.

அற்புதங்கள் தங்களிடம் வந்தும் அதை பார்க்காமல் ஆராயாமல் இருப்பவர்கள் நஷ்டவாளிகள் என்கிறது குர்ஆன், காலம் காலமாக தூதரும். அற்புதமும் பரிகசிக் கப்படுவதில், பைத்தியக் காரத்தனம் என்று கூறப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்பது குர்ஆன் கற்றுக் கொடுக்கும் பாடம் ஆகும். (15:11, 6:10)

(மீண்டும் சந்திப்போம்) ✵ ✵ ✵

# அர்த்தம் - அனர்த்தம்

## குர்ஆன் வசனம் 91:15 க்கு

அர்த்தம் அனர்த்தம் என்ற இந்த பகுதியில் இதுவரை நாம் வாசகர்கள் முன் வைத்திருக்கும் வசனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

| 2000 | | வசனம் | 2000 | | வசனம் |
|---|---|---|---|---|---|
| மார்ச் | - | 2 : 54 | ஜுலை | - | 33 : 6 |
| ஏப்ரல் | - | 2 : 15 | ஆகஸ்ட் | - | 5 : 101 |
| மே | - | 2 : 107 | செப்டம்பர் | - | 17 : 46, 18 :27 |
| ஜுன் | - | 33 : 56 | நவம்பர் | - | 2 : 189 |

குர்ஆனின் அடிப்படைக் கொள்கையான கலப்பற்ற ஓரிறை வழிபாட்டை விட்டு மக்களைத் திசை திருப்பும் விதமாகவே இன்றைய உலகில் உள்ள பெரும்பாலான குர்ஆன் மொழிபெயர்ப்புக்கள் அமைந் திருப்பதை இங்கே நாம் கண்டு வருகிறோம்.

குர்ஆனின் அடிப்படையில் இறைவனை. இவர்கள் கருதவேண்டிய முறைப்படிக் கருதாததால். கண்ணியம். கொடுக்க வேண்டிய அளவு கண்ணியம் கொடுக்காததால். இவர்கள் குர்ஆன் கூறும் இறைவனின் தன்மைகளை அறியாதவர்ளாக இருக்கின்றனர். இவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் அல்லாஹ் (கடவுள்) அரபியர்கள் இட்டுக்கட்டி உருவாக்கிய ஹதீஸ்களின் அடிப்படையில் ஆனவர். உதாரணமாக மனிதர்களிடையே பல்வேறு சமூகங்களை படைத்துவிட்டு 'முஸ்லிம்' சமுதாயத்திற்கு மட்டும் தனிப்பட்ட கருணையைப் பொழிபவராக ஹதீஸ்களில் கடவுளைக் கற்பிக்கின்றனர். அதுபோல், 'முஸ்லிம்'. மதத்தவர்களை மட்டும் அவரவர் பாவங்களுக்கு ஏற்ப நரகில் தண்டித்து விட்டு நபியின் ஷஃபா அத் (இறைவனிடத்தில் சிபாரிசு!) மூலம் அவர்களை நரகிலிருந்து வெளியேற்றி, கரிக்கட்டைகள் போலான அவர்கள் 'ஆபெ ஹயாத்தில்' (உயிர் நதி) குளிப்பாட்டி. சுவனம் நுழையச் செய்வார். அதே சமயம் மற்ற சமூகத்தவர்களை மட்டும் என்றென்றும் - மீளா நரகில் இட்டு தண்டனை அளித்துக் கொண்டே இருப்பார் என்று நம்புகின்றனர்.

உண்மையில். குர்ஆனில் கூறப்படும் கடவுள் (அல்லாஹ்) மிக்க நீதியானவர். எம்மதம் சார்ந்தவராக

இருந்தாலும் அவர் கடவுள் ஒருவரை மட்டும் நம்பி, கலப்பின்றி அவரை மட்டும் வழிபட்டு, அவருடைய தீர்ப்பளிக்கும் நாளின் வேதனைக்கு அஞ்சி நல்லவராக வாழ்க்கை நடத்தினால் அவர் இறைவனின் கருணையை நிச்சயம் அடைய முடியும் என்று குர்ஆன் கூறுகிறது. அதுபோல். இறைவனின் நினைவூட்டல்களை அலட்சியப் படுத்தி கடவுளுடன் மற்றவர்களை இணைத்து வழிபட்டு, தீயவராக வாழ்வுதனைத் தொடர்ந்தால், 'எம்மதம்' சார்ந்தவராக இருந்தாலும் மீளா நரகம் புக வேண்டியிருக்கும் என்று குர்ஆன் முழுமையும் மானிட சமூகம் அனைத்திற்கும் பொதுவான எச்சரிக்கைகளே காணப் படுகின்றது.

ஆயினும் ஹதீஸ்களின் அடிப்படையில் இன்றைய முஸ்லிம்கள் இறைவனை நம்புவதாலும். அதன் அடிப்படையில் மட்டுமே குர் ஆனை அணுகுவதாலும் இறைவனைப் பற்றிய இவர்களுடைய அறிவு குறைவுபட்டதாகவே உள்ளது. அது அவர்களுடைய குர்ஆன் மொழிபெயர்ப்புக்களிலும் வெளிப் படுகின்றது.

உதாரணமாக 91 வது அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் இறைவன் 'ஸமூது' கூட்டத்தாரைப் பற்றய தகவல்களைக் கூறுகிறார். அக்கிரமக்காரன் ஒருவனைத் தலைவனாக ஏற்றுக்கொண்டு இறைவன் தன்னுடைய அத்தாட்சியாக அவர்களுக்கு அளித்த ஒட்டகத்தை, தூதரின் எச்சரிக்கைக்குப் பின்னரும் கொலை செய்து விட்டனர் என்று கூறிய இறைவன் அவரகளுடைய பாவங்களின் விளைவாக அவர்களை அழித்து விட்டதாகக் கூறுகிறார். அதனைத் தொடர்ந்து அவ்வத்தியாயத்தின் இறுதி வசனத்தில் வலா யகாஃபு உக்பாஹா' என்று உள்ளது. இதற்கு மொழிபெயர்ப்பாக அவர்கள் அனைவரும் “இறைவன் (ஸமூதுக் கூட்டத்தார்) அவர்களுடைய முடிவைக் குறித்து அஞ்சவில்லை' என்றே மொழிபெயர்த்துள்ளனர்.

இறைவன் அஞ்சவில்லை என்ற அவர்களுடைய மொழி பெயர்ப்பு சரியானதுதானா. என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அனைத்தையும் மிகைத்த எல்லா வல்லமையும் உள்ள இறைவன் எதற்கு அல்லது யாருக்கு அஞ்சவேண்டும்? - ஸமூது சமூகத்தினரை அழித்ததைப் பற்றி அவர் அஞ்சவில்லை என்றால். . அவர் அஞ்சுவதற்குரிய விஷயங்கள் வேறு ஏதேனும் உள்ளதா என்ன? இந்த மொழிபெயர்ப்பில் இவர்கள் கூறவரும் செய்த என்ன?

மேலும் இறைவன் குர்ஆனில் தன்னைப் பற்றித் தன் அடியார்களுக்கு விவரிக்கும்போது உணவு உண்ணாதவர் என்று கூறுகின்றார். தூக்கமும் மறதியும் இல்லாதவர் என்று

அறிவிக்கின்றார். உண்மையைக் கூறுவதற்கு அவர் வெட்கப் படுவதில்லை என்று கூறுகின்றார். மேலும் அவர் அனைத்தையும், மிகைத்தவர் என்றும் கூறுகின்றார். இவ்வாறு தன்னைப் பற்றித் தெளிவாக இறைவன் விவரிக்கின்றார்.

குர் ஆனில் கூறப்படும் இறைவனின் தன்மைகளை வைத்து அவர் எதற்கும் அஞ்சவோ, வருந்தவோ தேவையில்லாதவர் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். எனவே இவர்களுடைய மொழி பெயர்ப்புக்களில் தொனிப்பதைப் போல் இறைவன் அஞ்சக் கூடிய விஷயங்களும் உண்டு என்பது நிச்சயம் ஒரு தவறான கருத்தே ஆகும். எனவே இத்தகைய தவறான கருத்துத் தொனிக்கும் அவர்களுடைய அனைத்து மொழி பெயர்ப்புக்களும் தவறானது என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

## வசனம் 91 : 15க்கு

### ஜான் டிரஸ்ட் மொழிபெயர்ப்பு

அதன் முடிவைப் பற்றி அவன் பயப்படவில்லை

●○●

### காதியானிகள் மொழிபெயர்ப்பு

அவன் அவர்களின் முடிவிற்காகக் கவலைப்படவில்லை.

●○●

### IFT மொழிபெயர்ப்பு

மேலும் (தனது இச்செயலின்) தீய விளைவு பற்றியும் அவனுக்கு அச்சம் இல்லை .

●○●

### அ.க.அ. அபதுல் ஹமீது பாகவி மொழிபெயர்ப்பு

இந்த முடிவைப் பற்றி(த் தன்னை ) பழிவாங்கி விடுவார் களென்று அவன் பயப்படவில்லை .

●○●

### K.A. நிஜாமுதீன், அப்துல் வஹாப் குழுவினர் மொழிபெயர்ப்பு

அதனுடைய முடிவை அவன் பயப்படமாட்டான்.

●○●

### யூசுப் அலியின் ஆங்கில மொழிபெயர்ப்பு

And for him is no fear of its Consequences.

●○●

### மர்மடியூக் பிக்தால் மொழிபெயர்ப்பு

He dreadeth not the. sequel (of Events)

●○●

## ரஷாத் கலீஃபாவின் மொழிபெயர்ப்பு

Yet, those who came after them remain heedless.

●○●

## வசனம் 91 : 15க்கு சரியான தமிழ் மொழிபெயர்ப்பு

'ஆயினும் அவர்களுக்குப் பின்னர் வந்தவர்களும் அலட்சிய மாகவே இருந்து வருகிறார்கள்.

●○●

இம்மொழிபெயர்ப்பைப் படித்த உடன் மிகத் தெளிவாக மேற்கண்ட வசனத்திற்கு இதுவே மிகச் சரியான மொழி பெயர்ப்பு என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். ஸமூது கூட்டத்தினரின் முடிவுக்குப் பின்னர் வந்தவர்களும் இறைவனின் தண்டனைக்கு அஞ்சாமல் அலட்சியமாக இருந்தனர் என்பது குர்ஆன் ஆமோதிக்கும் உண்மை. மேலும் இன்றைய சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ள '19' என்ற மாபெரும் அத்தாட்சியைச் சிதைக்க இன்றைய இறை நிராகரிப்பாளர்கள். நம்பிக்கை யற்றவர்கள் முனைந்து கொண்டிருப்பதும் அதனால் தங்களுக்கு ஏற்படவிருக்கும் இறைத்தண்டனை குறித்துச் சற்றும் அஞ்சாமல் அலட்சியமாக இருப்பது இன்றைய நடப்பு. எனவே மேற்கண்ட வசனத்திற்கு ரஷாதின் மொழிபெயர்ப்பு மிகச் சரியானது என்பதை ஐயத்திற்கிடமின்றி அறிந்து கொள்கிறோம்.

உண்மையில், வருந்தக் கூடிய இறைவன். கவலைப்படக் கூடிய இறைவன் என்பது பைபிளைச் சிதைத்த இறை நம்பிக்கை யற்றவர்களின் கருத்து ஆகும்.

பைபிளில் ஆதியாகம் 6:6 கூறுவது.

......மேலும் பூமியில் மனிதனைப் படைத்து விட்டோமே என்று இரட்சகர் வருந்தினார். அது அவருடைய இதயத்தில் கவலையை ஏற்படுத்தியது.

குர்ஆனுக்கு மாறான இத்தகைய நச்சுக்கருத்தை ஆமோதிக்கும் விதமாகவே. 'அதன் முடிவைப் பற்றி இறைவன் - அஞ்சவில்லை' என்ற இவர்களுடைய மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது.

அதே சமயம். ரஷாதின் மொழி பெயர்ப்பு இறைவனின் தன்மைகளைச் சிறிதும் பங்கப்படுத்தாமல் தெளிவான கருத்தைத் தருகிறது.

# கேள்வி? பதில்!

கேள்வி - ரமலான் இரவுகளில் (ஸஹர் நேரத்தில்) பயில் இஸ்லாமிய நிகழ்ச்சிகளில் அறிஞர்களைக் (தக்லீது) கண்மூடிப் பின்பற்றும்படி குர்ஆனில் உள்ளதாக ஒரு அறிஞர் கூறினார். இதனைப் பற்றித் தங்கள் கருத்து என்ன ? குர்ஆன் மட்டும் மார்க்கம் என்பது தெளிவான வழிகேடு என்றும் கூறப்பட்டது. தங்களுடைய இதழ் குறித்தும், ரஷாத் கலீஃபா குறித்தும் விமர்சனங்கள் செய்யப்பட்டன. அது குறித்தும் தங்களுடைய கருத்தைக் கூறவும்.

அப்துல் காதிர் - சென்னை

**பதில் : 1** ரமலானில் பல்வேறு பிரிவினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸஹர் நேர நிகழ்ச்சிகள் இன்றைய இஸ்லாமியர்களின் நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. அந்நிகழ்ச்சிகளில் அல்லாஹ்வை விடவும் அதிகமாகவே அவர்கள் முஹம்மது நபியையும். நபித் தோழர்களையும், அவ்லியாக் களையும் நினைவு கூர்ந்ததை நாம் காண முடிந்தது.. தவ்ஹீது வாதிகளின் நிகழ்ச்சிகளில் அல்லாஹ்வை விட அதிகமாகவே முஹம்மத் நபியையும் நபித்தோழர்களையும் நினைவு கூர்ந்தனர். மத்ஹபு வாதிகளின் நிகழ்ச்சிகளில் இமாம்கள் அதிகமாக நினைவு கூறப்பட்டனர். தரீக்கா வாதிகளின் நிகழ்ச்சிகளில் அவ்லியாக்கள் (மகான்கள்) அதிகமாக நினைவு கூறப்பட்டனர். அவர்களில் எந்தப் பிரிவினரும் இறைவனை மட்டும் தனித்தவராக நினைவு கூறத் தயாராக இல்லை. 39:45ல் இறைவன் கூறுவது போல். அவர்கள் உண்மையில், மறுமை வாழ்வில் நம்பிக்கை கொள்ளாத வர்களாக உள்ளனர் என்பதையும் நாம் அறிந்து கொள்ள இந்நிகழ்ச்சிகள் உதவி செய்தன.

அறிஞர்களை கண்மூடிப் பின்பற்ற வேண்டும் என்பது குர்ஆனில் உள்ள கட்டளை என்று கூறிய அவ்வறிஞர் அதற்கு ஆதாரமாகக் கூறிய வசனம் '.... நீங்கள் அறியாதவர்களாக இருந்தால் வேதத்தை உடையோரிடம் கேட்டுக் கொள்ளுங்கள்' என்ற வசனமே ஆகும்." (16 : 43.)

உள்ளங்கை நெல்லிக்கனியாக, அவ்வசனத்தில் இறைவன், வேதத்தை உடையோரைக் கண்மூடிப் பின்பற்றும்படி

அறியாதவர்களுக்குக் கட்டளையிட வில்லை அக்கருத்து இந்த இறைவசனத்தில் இல்லாத ஒன்றாகும். அது அவ்வறிஞருடைய சொந்தக் கருத்து. ஆயினும் அவர் கூசாமல், இறைவன் கண்மூடிப் பின்பற்றும்படி நமக்குக் கட்டளையிடுகின்றான் என்று கூறி விட்டார். 'இறைவன் மேல் பொய்யை இட்டுக்கட்டுபவனை விட அக்கிரமக்காரன் வேறு யார் ?(IO:17)

உண்மையில் அவ்வசனத்தில் இறைவன் நீங்கள் அறியா தவர்களாக இருந்தால் வேதத்தை உடையோரிடம் கேள்விகள் கேட்டு அறிந்து கொள்ளும்படிக் கூறுகின்றாரே அன்றி கண்மூடிப் பின்பற்றும்படிக் கூறவில்லை. கேள்விகள் கேளுங்கள் என்பதைக் கண் மூடிப்பின் பற்றுங்கள் என்று அவ்வறிஞர் கூறுகிறார் இவையிரண்டும் ஒன்றுதானா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். கேள்விகள் கேட்டு அறிந்து கொள்ளும்படிக் கட்டளையிட்ட கடவுள். நம்மைச் சிந்திக்கும்படியும், சரிபார்த்துக் கொள்ளும்படியும் கட்டளையிடு கின்றார்

இதனை யெல்லாம் மறைத்து கண் மூடிப் பின்பற்றா விட்டால் இஸ்லாத்தைப் பின்பற்றவே முடியாது என்று அவர் கூறியது இறைநிராகரிப்பும், இறை நிந்தனையும் ஆகும்

ஆயினும் குர்ஆன் அல்லாத மற்றொன்று மார்க்க ஆதாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால் அங்கே கண்மூடிப்பின் பற்றுதல் தவிர்க்க இயலாததாகி விடும் என்பது உண்மையே. மத்ஹப்கள் மார்க்கம் அல்ல. குர்ஆனும், ஆதாரபூர்வமான ஹதீஸ்களும் மட்டுமே மார்க்க ஆதாரம், கண்மூடிப்பின்பற்றுதல் தவறு என்று கூறிய தவ்ஹீதுவாதிகள் இன்று பல்வேறு நவீன மத்ஹபுகளாகப் பரிணமித்திருப்பதும், தங்களுடைய அறிஞர்களைக் கண்மூடிப்பின் பற்றிக் கொண்டிருப்பதும் அவ்வறிஞர் சுட்டிக் காட்டிய உண்மைகள் ஆகும். கூறப்படும் ஹதீஸ்கள் சரியானவைதானா. ஆதார பூர்வமானவைதானா என்பதை சரிபார்த்துக் கொள்ள இயலாத நிலை ஹதீஸ்களைப் பின்பற்றும் அனைவரிடமும் உள்ளது என்பது உண்மைதான்

ஆனால், இறைவனுடைய சத்திய மார்க்கத்திற்கு (அடிபணிதல் - சரணடைதல்) ஒரே ஆதாரம் குர்ஆன் மட்டுமே. இந்நிலையில், குர் ஆன் பாதுகாக்கப் பட்டிருப்பதாலும் எளிதில் கிடைக்கக் கூடியதாக இருப்பதாலும் கண் மூடிப்பின் பற்றும் அவசியம் கிஞ்சிற்றும் கிடையாது. மாறாக அது தவறான வழியும் ஆகும். குர்ஆனில் நமக்குத் தேவையான சில விஷயங்கள் இல்லையெனத் துணிந்து கூறும் இவர்களின் நிலை தந்தையைத் தேடிக்கொண்டுவரச் சொன்ன தன் தாயிடம், எங்கும் கிடைக்கவில்லை என்று சொல்லி யாரோ ஒரு மோசடிக்கார நபரை தன் தந்தை என்று

சமாதானம் செய்யும் ஒரு முட்டாள் சிறுவனின் நிலைக்கு ஒப்பானதாகும்.

பதில் 2 : மேலும் மற்றோரு (தவ்ஹீது !) அறிஞர், குர்ஆன் மட்டும் போதும் என் போர் ஒளிந்து ஒளிந்து (நோட்டிஸ், புத்தகம்) பிரசாரம் செய்வதாகவும், அவருடன் விவாதத்திற்கு வரவில்லை என்றும் அவருடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கவில்லை எனவும் அவதூறுகளைக் கூறினார்.

அவர்களுடைய கேள்விகளுக்கும் வாதங்களுக்கும் கடந்த ஒரு வருடமாக நாம் புதிய நினைவூட்டலில் பதிலளித்து வருவது நம் வாசகர்கள் அறிந்த ஒன்றே. மேலும் குர்ஆனைத் தவிர வேறு எதுவும் மார்க்க ஆதாரம் ஆகாது என்பதற்கு ஏராளமான ஆதாரங்களையும், வாதங்களையும் நாம் நம் இதழில் பிரசுரித்தே வருகிறோம்.

மேலும் ஹதீஸ்களின் கோளாறுகள் குறித்த ஏராளமான கேள்விகளையும் எழுப்பியே வருகிறோம் ஆயினும் அவை அனைத்தையும் கண்டு கொள்ளாமல், அவற்றுக்குத்தக்க பதில் கூறாமல் தவிர்த்து விட்டு நாம் ஒளிந்து கொள்வதாக நம் மீதே குற்றத்தைச் சுமத்துகிறார். நாம் எழுப்பிய கேள்விகளை எவராவது எழுதி அனுப்பினால், அதற்குப் பதில் கூறாமல், கேள்வியின் மூலகர்த்தாவை வரச்சொல்லுங்கள் அவரிடம் தான் நான் பதில் சொல்வேன் என்று அடம் பிடிப்பதும் எந்த ஊர் நியாயமோ நாம் அறிய மாட்டோம்.

நாம் பகிரங்கமாக ஒரு மாத இதழ் நடத்துகிறோம். அதில் ஹதீஸ்களின் நம்பகத்தன்மை குறித்து ஏராளமான கேள்விகள் உள்ளன. அவற்றுக்குரிய பதில்களை மேடைகளிலோ. பத்திரிக்கைகளிலோ கூறுங்கள். இருதரப்பு வாதங்களையும் செவிசாய்த்துக் கேட்பவர்கள், சிந்திப்பவர்கள் உண்மை எது என்பதை விளங்கிக் கொள்வார்கள்.

மேலும் தொலைக் காட்சியில் ஒலிபரப்பான. இஸ்லாமிய நிகழ்ச்சிகளில் குர்ஆனின் கருத்துக்கள் முதலிடம் பெறவில்லை. ஹதீஸ்களுக்குச் சாதகமான வசனங்கள் என அவர்கள் கருதிய வசனங்களை மட்டுமே திரித்து அர்த்தம் கூறினார்கள். நிகழ்ச்சிகள் பெரும் பகுதியை ஹதீஸ்களும். நபி. அவ்லியாக்கள் ஆகியோரின் புகழுரைகளும் மட்டுமே ஆக்கிரமித்திருந்தன. இவ்வாறு பொய்ச் செய்திகளையும், புராணங்களையும் கூறுவதற்குப் பதில் குர் ஆனின் கருத்துக்களை இவர்கள் அந்நிகழ்ச்சிகளில் கூறியிருந்தால் மிகவும் நல்ல பலன் ஏற்பட்டிருக்கும்.

❋ ❋ ❋

குர்ஆன் ஆய்வு மைய வெளியீடுகள்

முஸ்லிம்களுக்கு

# 19

# கேள்விகள்

இன்றைய முஸ்லிம்களின் தவறான பாரம்பரிய நடைமுறைகளை சுட்டிக்காட்டி சரியான இஸ்லாத்தின் (அடிபணிதல்) பக்கம் அனைத்து மக்களையும் புதிய சகாப்தத்தை நோக்கி அழைக்கிறது

## அறிவிப்பு

ரஷாத் கலிபாவின் ஜும்மா பயான்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும். ரஷாத் கலீபாவின் குர்ஆன் வகுப்பு ஆடியோ தமிழ், ஆங்கிலம், உருது, குர்ஆன் ஆடியோ. குர்ஆன் மட்டுமே மார்க்கம் ஹதீஸ்கள் மார்க்கம் அல்ல என்பது பற்றி தெளிவான குர்ஆன் வசனங்கள் கூடிய ஜும்மா பயான்கள், குர்ஆன் ஹதீஸ் இஸ்லாம் புத்தகம், முஸ்லிம்களுக்கு 19 கேள்விகள் புத்தகம், **புதிய நினைவூட்டல்** புத்தகங்கள் கிடைக்கும். மிகக் குறைந்த விலையில் ஆங்கிலம், தமிழ், குர்ஆன் Amazon, Flipkart மூலியமாக கிடைக்கும்.
www.kadavulmattum.org

**அளவற்ற அருளும் நிகரற்ற அன்பும் உடைய இறைவனின் திருப்பெயரால்**

# பிரகடனம்

- அனைத்து மக்களுக்கும் ஒருங்கி ணைந்த மார்க்கம்.
- அல்குர் ஆன் சந்தேகமின்றி அகிலங் களின் அதிபதியிடம் இருந்து வந்ததே.
- இறுதி வேதம், அது இறைவனிடம் இருந்து வந்ததுதான் என்பதற்கான தெளிவான அத்தாட்சிகளை தனக் குள்ளேயே கொண்டதாக இருக் கிறது. அது மனித சக்திக்கு அப்பாற்பட்ட முறையில் கணித அடிப்படையில் அமைக்கப்பட்டுள் ளது.
- இது, இறைவன் தான் சத்தியம் என்பதையும், அவர் மரணித்தவரை உயிர்ப்பிப்பார் என்பதையும் அவர் அனைத்திற்கும் ஆற்றல் உடையவர் என்பதையும் நிரூபிக்கிறது.
- எல்லா இறைதூதர்களும் தந்த செய்திகளை ஒருங் கிணைத்து ஒரே செய்தியாக உலகிற்கு தருகிறது.
- முற்றிலும் இறைவனுக்கே அடிபணி தல் இறைவனை மட்டுமே வணங்கி, வணக்கத்தை கலப்பின்றி அவருக்கு மட்டுமே செய்தல்

**ஓர் உலகம்**
**ஓர்-இறை**
**ஒரே செய்தி**

Book - Post

To

*If undelivered Please return to*

SB Graphic Design And Printers
+91 824 854 1120,+91 877 825 7662